# அறிவு வழி

பகுத்தறிவு சமதர்ம இயக்க மாத ஏடு


## பாபாசாகேப் அம்பேட்கர் நூற்றாண்டு துவக்க விழா சிறப்பு மலர்




**1990 ஏப்ரல் 'அறிவு வழி' இதழுடன் தனி இணைப்பு**

சிறப்பாசிரியர் :
நெ. து. சுந்தரவடிவேலு

ஆசிரியர் :
செஞ்சட்டை கே. பஞ்சாட்சரம்

துணை ஆசிரியர் :
மு. பா. எழிலரசு

# மலர் பயிலும் மனங்களுக்கு......!

சமூகப் போராளிகளுக்கு....!

எமது....

ஜெய்பீம் வணக்கங்கள்....!

இந்தியச் சமூக அமைப்பின் கலாச்சாரச் சீரழிவை உலக அரங்கில் சரியாகச் சுட்டிக்காட்டி அதைச் செப்பனிடும் தியாகப் பணியில் தன்னை முழுமையாய் அர்ப்பணித்த முதல் மனிதன்— மானுட மாமேதை—பாபாசாகேப் அம்பேட்கர்.

இதற்காக அவர் நடத்திய தன்மானப் போர்களுக்குத் தூலமாக நின்றவைதான்—மனிதகுல உயர்வுக்கு மூலமாகத் திகழும் பகுத்தறிவு பொதுவுடைமைத் தத்துவங்கள்.

இந்தக் கொள்கைகளையே தனது எல்லைகளாகக் கொண்டு திங்கள்தோறும் தவறாமல் வெளிவரும் இலட்சிய ஏடுதான் அறிவு வழி.

எனவே, சரித்திரம் படைத்த அந்தச் சான்றோனின் ''நூற்றாண்டு துவக்கவிழா'' மலர் ஒன்றை அறிவு வழி வெளியிட வேண்டுமென்ற சிந்தனை—அவரால் பயன்பெற்ற பாம்பரையின் ஒருகிளையில், சிறுதளிராய் துளிர்த்திருக்கும் என்னை பிடர்பிடித்து ஆட்டியது.

இந்தச் சிந்தனையைச் செயலாக்கும் நோக்கத்தில் வரைந்திட்ட 'மலர்திட்ட மசோதா'வை நான் சமர்ப்பித்து முன்மொழிந்தபோது....

சாதியெனும் கொடும்விலங்கால் பூட்டப்பட்டச் சந்ததிக்குச் சமஉரிமை மீட்டுத்தந்த ஊமைகளின் தலைவனுக்கு புகழ்மாலை சூட்டுவது பகுத்தறிவு சமதர்ம இயக்கத்தின் தார்மீகக் கடமை என்று ஆர்வத்தோடு ஆமோதித்தார்— ஆனந்தித்தார்—'அறிவு வழி' ஆசிரியர் செஞ்சட்டை கே. பஞ்சாட்சரம்.

'அறிவு வழி'யின் ஆசிரியர்—துணை ஆசிரியர் ஆகிய எமதிருவர் எண்ணங்களும் ஒருவண்ணமானவுடன், மலருக்கு மணம் சேர்க்கும் பணியில் 'களம்பல கண்ட கொள்கைவாதி' பேராசிரியர் பெரியார்தாசனும் எம்முடன் இணைந்தார்.

அறிவு வழி அலுவலகப் படிக்கட்டில் நடைபெற்ற எங்களது 'முத்தரப்பு மாநாட்டின்' ஆலோசனை மண்டபத்தில் 'மலர் சிறப்பை' மையப்படுத்தியபோது.... வெளியீட்டு மசோதா— விவாதிக்கப்பட்டது.

ஏப்ரல் இதழ் — சிறப்பிதழானது.

சிறப்பிதழ் — இணைப்பு மலரானது.

மலரின் நிறமோ — நீலமாய் ஆனது!

இவ்விதம் கருவாகி உருவான இம்மலரின் உள்ளே மணம்வீசும் மகரந்தத் துகள்கள்தான் எத்தனை....எத்தனை....!

- எமது விடுதலைக்கு வித்திட்ட, சமூகப் போராளி பாபாசாகேப் அம்பேட்கரின் சுதந்திரச் சிந்தனை வீச்சு.
- தலைவர் அம்பேட்கரின் தன்மானக் கொள்கைக்குத் தமிழகத்தில் தோள் கொடுத்தப் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சொற்பெருக்கின் சிறு தொகுப்பு.
- பகுத்தறிவுப் பாசறையில் பொதுவுடைமைப் போர்வாளைப் பட்டைதீட்டிய தளபதி 'குத்தூசி குருசாமி'யின் அரியதொரு கட்டுரை.
- தமிழகத்தில் பல பள்ளிக்கூடம் அமைத்தக் கல்விக்காவலர் அறிவு வழி சிறப்பாசிரியர் தளபதி நெ. து. சு. தன் உடல்நலம் குன்றிய நிலையிலும் எழுதிய வைரவரிகள்.
- தோழர் அம்பேத்கார் யாரென்பதை இந்திய மார்க்சியவாதிகளுக்கு எடுத்துரைக்கும் பகுத்தறிவ சமதர்ம இயக்கத் தலைவர் தளபதி இரா. குசேலரின் கருத்தோட்டம்.
- செட்யூல்டு மக்களின் உயர்விற்கு இன்றுவரை ஓயாது உழைத்துவரும் உத்தமத்தலைவர், தியாகசீலர் தளபதி மு. சுந்தரராசன் தீட்டிய உணர்ச்சிமயமான கருத்தோவியம்.
- இந்நாட்டில் சமதர்ம ஆட்சி அமைய டாக்டர் அம்பேட்கர் ஆய்வுகள் தேவையென்கின்ற மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை இயக்கத் தலைவர் அறிஞர் வே. ஆனைமுத்து டெல்லியிலிருந்து அனுப்பிய கட்டுரை.
- தன்மானத் தலைவர் அம்பேட்கரின் தார்மீகக் கொள்கைகளை, தத்துவச் செறிவோடு அறிவரங்கில் போதித்துவரும் பேராசிரியரும், பெரியார் இயக்கக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான பெரியார்தாசனின் ஆற்றல்மிகு அற்புதப் படைப்பு.

(தொடர்ச்சி 51ம் பக்கம் பார்க்க)

கற்பி....! கிளர்ச்சி செய்..!! ஒன்று சேர்....!!!



# நீ சுதந்திர மனிதனா...?

—பாபாசாப் அம்பேட்கர்

''எவன் ஒருவன் காலத்திற்கேற்ப மாற்றங்களை ஏற்றுக் கொள்கின்றானோ.... எவன் ஒருவன் சூழ்நிலைக் கைதியாய் இல்லாமல் பொறுட்டுணர்ந்து கடமை ஆற்றுகின்றானோ.... எவன் ஒருவன் கிளர்ந்து எழுகின்ற மனத்திண்மையைப் பெற்றிருக்கின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....!''

''எவனொருவன் முன்னோர்களின் தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாமல்—பழம் போதனைகள் என்பதற்காக அவற்றினை அப்படியே ஏற்காமல்—அறிவுப் பூர்வமாகச் செயல்படுகின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....!''

''எவனொருவன் எதற்கும் சரணடையாமல்—மற்றவர்களின் இச்சைப்படி செயல்படாமல்—எதனையும் சோதனைக்குட்படுத்தி—அறிவு வெளிச்சத்தால—ஆய்ந்து—ஏற்கின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....!''

''எவனொருவன் தம் உரிமைகளைத் தற்காத்துக் கொள்ள எப்போதும் தயாராக இருக்கின்றானோ.... எவனொருவன் பொது விமர்சனத்திற்கு அச்சப்படாமல் இருக்கின்றானோ.... எவனொருவன் அடுத்தவன் கைப்பாவையாய் மாறாமல—போதிய சிந்தனையும்—சுயமரியாதையும்—பெற்றிருக்கின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....!''

''எவனொருவன் மற்றவர்களைப்போல் வாழ்க்கையை நடத்தாமல்—தன் சுய சிந்தனைப்படி வாழ்வை வரையறை செய்து கொண்டு—இதன்படி வாழ்வை நடத்த வேண்டுமென்று கருதி—அதன்படியே வாழ்கின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....''!

''சுருக்கமாகச் சொன்னால்.... எவனொருவன் தன்னை மட்டுமே தனக்கு ஆசானாமக் கருதுகின்றானோ....

—அவனையே நான் சுதந்திர மனிதன் என்பேன்....!''

—இதுவரை நான் கூறிய கருத்துக்களின்படி பார்த்தால்....

நீ சுதந்திர மனிதனா....?

(1936 மே 30-ல் பம்பாய் மகர்கள் மாநாட்டில் பாபாசாகேப் ஆற்றிய உரையின் ஒரு சிறு பகுதி)



# டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

●

## வாழ்க்கைக் குறிப்புகள்

| | |
|---|---|
| 1891 | ஏப்ரல் 14 அம்பேத்கர் பிறந்தார். |
| | தந்தை - ராம்ஜி மாலோஜி சாங்க் பால். |
| | தாய் - பீமாபாய். |
| 1905 | திருமணம் - மணமகள் ராமாபாய் |
| 1908-18 | படிப்பு முடிந்து, பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினாச். |
| 1924 | பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞரானார். |
| 1926-34 | பம்பாய் மாநிலச் சட்டப்பேரவையின் நியமன உறுப்பினரானார். |
| 1927 | மகாத் நகர சவுதார் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் போராடிப் பெற்றார். |
| 1928 | பம்பாய், அரசினர் சட்டக் கல்லூரியின் முதல்வராக நியமனம். |
| 1930 | நாசிக் கோயில் நுழைவு சத்தியாகிரகப்போர். |
| 1930-33 | இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கு உறுப்பினராக நியமனம். |
| 1931 | வட்டமேசை மாநாட்டில் தனித்தொகுதி கோரிக்கையை வெளியிட்டார். |
| — | தனித்தொகுதி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| 1932 | செப்டம்பர் - தனித்தொகுதியை எதிர்த்து காந்தியார் உண்ணாவிரதம்; பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது. |
| 1942 | வைசிராய் நிர்வாகக் குழுவின் உறுப்பினரானார். |
| 1946 | அரசியல் சட்ட வரைவுக்குழுவின் உறுப்பினரானார். |
| 1948 | விடுதலையுற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரானார். |
| 1951 | அமைச்சர் பதவியைத் துறந்தார். |
| 1952 | ராஜ்யசபை உறுப்பினரானார். |
| 1956 | அக்டோபர் 14 நாசிக் நகரில் இலட்சக்கணக்கான மக்களுடன் புத்த மதத்தைத் தழுவினார். |
| 1956 | டிசம்பர் 6 டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் மறைந்தார். |

# டாக்டர் அம்பேத்கரின் பொதுப்பணிகள்

1919 சௌத்பரோ தூதுக் குழுவிடம் இந்திய நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் உரிமை வேண்டும் என்று கோரிக்கை அளித்தார்.

1924 சமூக, கல்விப் பணிகள் தொடங்கின.
ஒதுக்கப்பட்டோர் நலவாழ்வுப் பேரவை (பகிஷ்கரித் ஹிதகர்னி சபா) தொடக்கம்.

1925-30 தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காகப் பம்பாய் மாநிலத்தில் நான்கு விடுதிகளை உருவாக்கினார்.

1936 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி'யை அமைத்தார்.

1942 அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், அரசியல் கட்சியாக அமைக்கப் பட்டது.

1945 'மக்கள் கல்விக் கழகம்' உருவானது.
—தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்க்குக் கல்லூரிகள் ஏற்பட்டன.

1955 புத்த மார்க்கத்தைப் பரப்ப 'பாரதீய புத்த மகாசபை'யை ஏற்படுத்தினார்.

1956 அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனை 'இந்தியக் குடியரசு கட்சி'யாக மாற்றியமைக்க ஏற்பாடுகள் செய்தார்.

# டாக்டர் அம்பேத்கரின் படிப்பும் பட்டங்களும்

1908 மெட்ரிகுலேஷன் படித்து முடித்தார்.

1912 பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பி. ஏ. படிப்பு

1915 அமெரிக்கா - கொலம்பியா பல்கலைக் கழகத்தில் எம். ஏ. (பொருளாதாரம்) முடித்தார்.

1916 பிஎச். டி. (டாக்டர்) பட்டம் பெற்றார்,

1920 இலண்டன் பொருளாதார அரசியல் பள்ளியில் சேர்ந்தார்.

1921 இங்கிலாந்தில் எம். எஸ்ஸி. (பொருளாதாரம்) பட்டம் பெற்றார்.

1922 ஜெர்மனி, பான் பல்கலைக் கழகத்தில் படிப்பு.

1923 இங்கிலாந்தில் டி. எஸ்ஸி. (D. Sc.) பட்டம் பெற்றார்—பாரிஸ்டரானார்.

1952 கொலம்பியா பல்கலைக் கழகம் எல்எல். டி. (LL, D.) கவிரவ பட்டம் அளித்துப் பாராட்டியது.

## டாக்டர் அம்பேத்கர் நடத்திய பத்திரிகைகள்

1920 'மூக் நாயக்' (ஊமைகளின் தலைவன்)
1927 'பகிஸ்கரித் பாரத்' (ஒதுக்கப்பட்ட பாரதம்)—மாதம் இருமுறை
1930 'ஜனதா' மாதம் இருமுறை ஏடு
பாரத் பூஷன் — அச்சகம் அமைத்தார்.

## டாக்டர் அம்பேட்கர் எழுதிய நூல்கள்

1923 'ரூபாயின் சிக்கல்—அதன் தொடக்கமும் தீர்வும்'
19?5 'பிரிட்டிஷ் இந்தியாவில் மாநில நிதி தோற்ற வளர்ச்சி'
1945 'தீண்டாதோருக்குக் காங்கிரஸ் செய்ததென்ன?'
1946 'சூத்திரர்கள் யார்?—அவர்கள் நான்காம் வருணத்தவரானது எப்படி?'
1846 'பாகிஸ்தான் அல்லது இந்தியாவின் பிரிவினை'
1947 'மாநிலங்களும் சிறுபான்மையோரும்'
1948 'தீண்டாதார் யார்? அவர்கள் தீண்டாதாரனது எவ்வாறு?'
1948 'மகாராஷ்டிரம்—மொழிவழி மாநிலம்'
1955 'மொழிவழி மாநிலங்கள் பற்றிய சிந்தனைகள்'
1957 'புத்தரும் அவரது தம்மமும்'
—'இந்து மாதர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்'
—'தீண்டாதார் விடுதலை'

## டாக்டர் அம்பேத்கரின் சிந்தனைத் தொகுப்பு நூல்கள்

1917 இந்தியாவில் சாதிகள்—தோற்றமும் வளர்ச்சியும்
1935 சாதி ஒழிப்பு
1938 ரயில்வே ஊழியர் மாநாட்டு உரை
1943 ரானடே, காந்தி, ஜின்னா
1934 தொழிலாளரும் நாடாளுமன்ற ஜனநாயகமும்
1945 தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தில் பேருரை
1952 நாடாளுமன்ற ஜனநாயகம் பற்றி....
1956 பௌத்தமும் பொதுவுடைமையும். மற்றும் பிற....



# பாபாசாகேப் அமபேத்கர் நாட்குறிப்பு

தொகுப்பு: பேச்சிமுத்து பேரன்

குறிப்பு: பாபாசாகிபின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை பல்வேறு நூல்களிலிருந்து திரட்டித் தொகுத்து, ஒவ்வொரு மாதமும் தேதி வாரியாகத் தரப்படும் இப்பகுதி, கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து வெளியாகி வருகிறது. வாசகர்கள் பலர் இப்பகுதியைப் பெரிதும் வரவேற்பதால், பாபாசாகிபின் சரித்திர வரிகள் அந்தந்த மாத அறிவு வழியில தொடர்ந்து வெளியாகும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர், 'அறிவு வழி'

## ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

1-4-1946 டெல்லி—தொழிலாளர்களின் ஊதிய விகித சட்டங்களை அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்தார்.

2-4-1967 டெல்லி—பாபாசாகிபின் சிலை பாராளுமன்ற வளாகத்தினுள் குடியரசுத் தலைவர் எஸ். இராதாகிருஷ்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

8-4-1927 ''பகிஷ் கிரிட் பாரத்''—என்ற மாதமிருமுறை மாராட்டிய இதழைத் தொடங்கினார்.

4-4-1944 இந்தியத் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை சட்டமாக்க.... தாக்கல் செய்தார்.

5-4-1940 பாபாசாகேப்பை, 'ஜின்னா' சந்தித்து உரையாடினார்.

9-4-1930 நாசிக் நகர் கலாராம் கோயில்முன் நடத்திய அறப்போராட்டத்தில் தியாகத் தழும்புகள் ஏற்றார்.

12, 13-4-1942 பம்பாய்—பாபாசாகிபின் பொன்விழா நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

14-4-1891 பாபாசாகிபின் பிறந்தநாள்.

15-4-1948 சாரதா அம்மையாரை திருமணம் புரிந்தார்.

16-4-1934 நாகபூர்—பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றினார்.

18-4-1939 ராஜ்காட்—பாபாசாகிபை சந்திக்க இருந்த காந்திக்கு ஜுரம் வந்து விட்டதால் இருவரின் கருத்துப் பரிமாற்றம் நடைபெறவில்லை.

19-4-1935 பம்பாய்—அரசு சட்டக் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டார்.

22-4-1946 ஹைதராபாத்—பொதுக் கூட்டத்தில் எழுச்சியுரையாற்றினார்.

23-4-1933 பூனா ஒப்பந்தம் குறித்துக் காந்தியுடன் கருத்துப் போர் புரிந்தார்.

24-4-1933 பிரிட்டிஷார் வெளியிட்ட வெள்ளை அறிக்கையை விவாதிக்க லண்டன் புறப்பட்டார்.

29-4-1947 பாபாசாகிபின் கடும் முயற்சியினால் ''தீண்டாமை எந்த உருவத்திலும் இருக்கக் கூடாது'' என்ற தீர்மானம் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றபபட்டது.

மே, மாத நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் தொடரும்



# பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கரும் நானும்

—தந்தை பெரியார்—

1925-ஆம் வருடத்திலே இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல; மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்துவந்திருக்கிறது என்பதால். ஆனால், வடநாட்டில் அப்படியல்ல.

வடநாட்டில் இருக்கிற இந்த பேதத்தைப் பற்றி, இழிசாதித் தன்மையைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. சூத்திரன், பஞ்சமன் என்றால் ஏதோ 'திவான்பகதூர்', 'ராவ்பகதூர்' பட்டம் என்பது போன்ற பட்டம் என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிற மக்கள் வாழும் நாடு அது. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியமாகும். ஆனால், 1927, 1928லேயே அம்பேத்கார் சுயமரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார். நாசிக்கில் கூடிய ஒரு மாநாட்டிலே இராமாயணத்தைப் போட்டுக் கொளுத்தியிருக்கிறார். 1930-லே என்று நினைக்கிறேன்—'ஆதித்திராவிட மக்கள் இந்து மதத்திலே இருப்பது தவறு; இந்து மதந்தான் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கியது' என்பதாகச் சொல்லி, 'அனைவரும் முஸ்லிம் ஆகவேண்டும்; நானும் முஸ்லிம் ஆகப் போகிறேன்' என்று அவர் சொன்னார். எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதைக் கண்டித்தார்கள். மாளவியா, விஜயராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம், 'அம்பேத்கார் அவர்களே, உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்' என்பதாகத் தந்தி கொடுத்தார்கள்.

அப்போது தோழர் அம்பேத்கார் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், 'நீங்கள் ஒண்டியாகப் (தனியாகப்) போகக்கூடாது; குறைந்தது ஓர் இலட்சம் பேரோடு மதம் மாறவேண்டும்; அப்போதுதான் முஸ்லிமும் மதிப்பான். இல்லாவிட்டால், தனியாக அங்கு போனால் அவனும் நம்மை கவனிக்க மாட்டான். உங்கள் தாழ்த்தப்பட்ட இனம் நசுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கும். முஸ்லிம் ஆகிவிட்டால் இந்து மதத்தின் இழிவுபற்றி நீங்கள் பேசினால், 'முஸ்லிம் இந்துமதத்தைப் பற்றிப் பேசுவதா?' என்பதாகக் கிளப்பிவிடுவார்கள். ஆகையால், ஒரு இலட்சம்- பேரோடு தாங்கள் போகும்போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்' என்பதாகத் தந்தி கொடுத்தேன்.

அதற்கப்புறந்தானே—பயந்துகொண்டு, ஆதித் திராவிட மக்களுக்கு காங்கிரஸ்காரர்களும் ஏதோ நன்மை செய்வதாக வந்தார்கள்! 'மதம் மாறுவேன்' என்று மிரட்டிய தோழர் அம்பேத்கார் அவர்கள் ஆதித் திராவிட மக்களுக்குப் பெரும் அளவுக்கு நன்மை செய்து கொடுத்திருக்கிறார். உள்ளபடி சொல்லுகிறேன், இந்துக்கள் யாரிடமாவது வசமாக மாட்டினார்கள் என்றால், அது தோழர் ஜின்னா அவர்களிடமும், தோழர்

அம்பேத்கார் அவர்களிடமும்தான். தோழர் ஜின்னாவிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள்; ஆனால் அம்பேத்காரிடமிருந்து விடுதலை பெறமுடியவில்லை; அவர் அடிக்கடி ஓங்கி அடித்துக் கொண்டேயிருக்கிறார்.

அவருடைய தைரியத்திற்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அவர் மந்திரியாக இருக்கும்போது ஒருதடவை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு கூட்டத்தில் பேசும் போது, 'கீதை — முட்டாள்களின் பிதற்றல்' என்று சொன்னார். கீதைக்கு இந்த நாட்டில் எவ்வளவு விளம்பரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காந்தியாரிலிருந்து, ஆச்சாரியாரிலிருந்து — பெரிய பெரிய அய்க்கோர்ட் ஜட்ஜுகள், இன்னும் பெரிய மனிதர்கள் என்பவர்களெல்லாம் கீதையைப் புகழ்வதே வேலையாகக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; கீதைக்கு வியாக்கியானம் கூறுவது, கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது என்பது ஒரு மதிப்பு, கவுரவம் என்பதாக இந்த நாட்டில் இருக்கிறது.

அப்படிப்பட்ட பெரும் விளம்பரமான நிலையிலிருக்கிற கீதையை, 'முட்டாள்களின் பிதற்றல்' என்று அம்பேத்கார் சொன்னார். முட்டாள்களுடையது என்றாலே மோசம்; அதிலும் அந்த முட்டாள்களுடைய பிதற்றல் என்று கீதையை மிகவும் இழிவுபடுத்திக் கூறினார்.

பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் நானும் நெடுநாட்களாக நண்பர்கள் என்பது மாத்திரமல்ல; பல விஷயங்களில் எனது கருத்தும் அவரது கருத்தும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும்.

சாதி ஒழிப்பு என்ற விஷயத்தில் மாத்திரமே நாங்கள் ஒத்த கருத்துடையவர்கள் என்பது அல்ல. இந்துமதம், இந்து சாஸ்திரங்கள், இந்துக் கடவுள்கள், தேவர்கள் என்பவர்கள் பற்றிய—இந்துமதப் புராணங்கள் இவைகளைக் குறித்தும்கூட எங்கள் இரண்டுபேர்களின் கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அது மட்டுமல்ல, அவைகளைப்பற்றி நான் எவ்வளவு உறுதியாகவும் பலமாகவும் எனது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறேனோ அவ்வாறுதான் அவரும் மிகவும் உறுதியாகவும் பலமாகவும் இலட்சியங்களைக் கடைப்பிடித்தார்.

இப்படிச் சில விஷயங்களில் மாத்திரமல்ல; பலவிஷயங்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரோ அதே அபிப்பிராயம்தான் எனக்கும் இருந்து வந்தது. பல விஷயங்களில நாங்கள் ஒருவருக்கொருவர் கலந்துகொள்ளாமலேயே—அந்தப்படி அபிப்பிராயம் கொண்டவர்களாக இருந்துவந்தோம். சந்தர்ப்பம் கிடைத்தபோது நானும் அவரும் எங்கள் இருவருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வதும் உண்டு.

என் பிரச்சாரத்தில் சாதி ஒழியவேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லவரவில்லை. அதற்கு முக்கிய அடிப்படையான சாதி, மதம்—ஆசாரம் ஒழியவேண்டும் என்றுதான் நானும் சொல்லி வருகிறேன்; அவரும் அப்படித்தான் சொன்னார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் புத்த மார்க்கத்தில் சேரும்போது எனனென்ன பிரமாணம் எடுத்துப் படித்தாரோ, [இராமனையும், கிருஷ்ணனையும் கடவுள்களாக வணங்கமாட்டேன் என்பன போன்றவைகள்] அவைகளைத்தான் நான் கூறுகிறேன். அதன்படிதான் எங்கள் நாட்டில் பத்தாயிரக்கணக்கான மக்கள் இராமனையும் பிள்ளையாரையும் கொளுத்தினார்கள்: உடைத்தார்கள். இந்தப் பிரமாணத்தில் உள்ள பல விஷயங்கள் எனக்குப் பல வருடங்களுக்கு முன்பே தோன்றித்தான், அவைகளை நாங்கள் பிரச்சாரமாகச் செய்து வருகிறோம். இதைப் படித்துவிட்டு நான் சொல்லவில்லை. எப்படியோ எங்களுக்கு அப்படித்தான் அபிப்பிராயம் தோன்றியது.


நமது 'குடிஅரசு' ஏட்டில் என்னென்ன கருத்துக்கள் வருமோ அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார் நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டி வந்தேன்.

நமது 'குடிஅரசி'ல் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் ஆதிதிராவிடர்கள் அவரை உணர்ந்தார்கள்.

டாக்டர் அம்பேத்கார் ஆரம்பத்தில் இந்து மதத்தை ஏதாவது திருத்தலாமா என்று எண்ணினார்; பிறகு அதனைத் திருத்தமுடியாது—அதனை ஒழித்தால் ஒழிய வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது.

இன்றுமட்டுமல்ல; முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும். ●



# டாக்டர் அம்பேத்கர் ஒரு பெரிய புரட்சிக்காரர்

தளபதி குத்தூசி குருசாமி

இந்து சமூகத்தை—இந்து மதத்தை—இந்து சாஸ்தர புராணங்கள் இவற்றையெல்லாம் கடுமையாகத் தாக்கிய ஒருவர். காந்தியாரை இறுதிவரையில் கண்டித்து எதிர்த்து நின்றவர், காங்கிரஸ் அமைப்பையே எதிர்த்துக் கொண்டிருந்தவர் டாக்டர் அம்பேத்கார்.

பரந்த படிப்பும், ஆழ்ந்த அறிவும், வியக்கத் தக்க நெஞ்சுறுதியும் கொண்ட டாக்டர் அம்பேத்கார்—இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை மூளையாக விளங்கிய அம்பேத்கார் ''இக்கால மனு'' என்ற பட்டப் பெயர் தாங்கினார்.

ஆனாலும், ''மனுதர்மத்தைக் கொளுத்த வேண்டும், பகவத்கீதையைக் கொளுத்தவேண்டும்'' என்று அடிக்கடி கூறியது போலவே தன் மூளையினால் உருவாக்கப்பட்ட ''இந்திய அரசியல் சட்டத்தையே கொளுத்த வேண்டும்'' என்று ஆந்திர மசோதாபற்றி மேல்சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது (3—9—53) கூறினார்.

அம்பேத்கார் இக்கால இளைஞர்களுக்கு இணையற்ற எடுத்துக்காட்டானவர். தனியாத கல்வி வேட்கை உடையவர், ஒரு நாளைக்கு 16 மணி நேரமும் படிப்பார், பல துறைகளிலும படிப்பார். சமஸ்கிருதத்தில் நல்ல கல்வி அறிவு, மதத்துறையில் ஆழ்ந்த ஆராய்ச்சி, சட்டத்திலும் நிபுணர்.

இந்திய சமுதாயப் புரட்சித் தலைவர்களில் அம்பேத்கார் முதலிடம் பெற்றுவிட்டார், எப்படி? இரண்டுலட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை ஒரே இடத்தில் கூட்டிவைத்து, ''நாங்கள் இந்து மதத்தைவிட்டு வெளியேறி புத்தர் நெறியில் சேர்த்து கொள்கிறோம்'' என்று (நாகபுரியில்) சொல்லச் செய்த பெரியாரல்லவா?

இந்து (பார்ப்பன) மதத்தில் தம் சமூகத்தார் பல நூற்றாண்டுகளாகப் பெற்றுவந்த சகிக்கமுடியாத கொடுமைகளைப் பொறுக்கமுடியாத இவர், அத்தனை கோடி மக்களையும் முஸ்லிம்களாக்கி விடலாமா, அல்லது சீக்கியர் ஆக்கிவிடலாமா என்றெல்லாம் பலதடவை சிந்தித்தார். தீண்டாமைக்குக் காரணம் சாதியும், அதற்கு ஆதாரமான புராண—இதிகாச—சாஸ்திரங்களும்தான் என்பதை நன்குணர்ந்து, இடைவிடாது எழுதியும் பேசியும், அவர் கூற்றுக்களை மறுப்பதற்கு எவராலும் முடியவில்லை.

''தீண்டாதவர் யார்?'', ''சூத்திரர் யார்?'' ''புத்தமதம்'' — போன்ற பல அரியபெரிய ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார் அம்பேத்கார். இவற்றைப் படிப்போர் இவரது இமாலய ஆராய்ச்சியையும், கடல் போன்ற அறிவையும் உணரலாம்.

வழக்கறிஞர் தொழில்மூலம் நிறையப் பொருள் ஈட்டினார். அதைக் கொண்டு ஆயிரக்

கணக்கான நூல்கள் வாங்கிப் படித்தார். 'தனிப்பட்டவர்களின் நூல் நிலையங்களில மிகப்பெரியது' என்று பலர் கூறும்படியான சிறந்த நூல் நிலையத்தைக் கொண்டிருந்தார் ''சித்தார்த்தா கல்லூரி'' என்ற கல்லூரியை நிறுவினார்.

உணர்ச்சியின் ஊற்று! தன்னம்பிக்கையின் சிகரம்! கல்வியின் கடல்!

உழைப்பினால் உயர்ந்த உலகப் பெரியார்களில் ஒருவர் டாக்டர் அம்பேத்கர்.

ஆறுகோடித் தாழ்த்தப்பட்ட மக்களின் அரும்பெரும் தலைவர்!

சாதியின் வைரி!
மதத்தின் கோடரி!
பகுத்றிவின் பாசறை!

அம்பேத்கார் அவர்கள் ஒரு பெரிய புரட்சிக்காரர். எதையும் தந்திரமாகச் செய்யவேண்டும் என்கிற ஈனபுத்தி அவரிடம் கிடையாது, தெரியாது. காரணம், அவருக்குத் தேவையில்லை. ஜனாதிபதி பதவி தனக்கு வந்தபோது தேவையில்லை என்று கூறியதாகச் சொன்னார்கள். அம்பேத்கார் அவர்கள் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்த இடத்திற்கு போய்விட்டார். அவரைவிட அதிகமான பணமும், மற்ற வசதிகளும் கொண்டோர் இருக்கிறார்கள் என்று சுட்டிககாட்டமுடியும். ஆனால், அம்பேத்கார் அவர்களைப போன்ற அறிவாளி என்று ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியாது.

ஆதிதிராவிடர் என்று கூறிக்கொள்கிறார்களே! அந்த சமுதாயத்திற்குப படிப்பென்றால் என்ன என்று அறியாத காலத்திலேயே அரசியல் பொருளாதாரத்துறை மட்டுமல்ல, சமுதாயத் துறை—மதத்துறையிலும் படித்த மேதையாக விளங்கினார்.

நான் சர்க்கார் வேலையில் டில்லியிலிருந்த காலத்தில் ஒருநாள் சர். ஏ. ராமசாமி(முதலியார்) அவர்கள் தம்முடைய இல்லத்தில் டாக்டர் அம்பேத்காருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது திரு. என். சிவராஜும் உடனிருந்தார். இவர் சைவத்தில் நல்ல நம்பிக்கையுள்ளவர் என்றார்கள். அதற்கு அம்பேத்கார், 'சைவம்' 'வைணவம்' என்பவைகளைப்பற்றித் தெரிந்துகொண்டு ஆராய இங்கிலீஷில் எதாவது இருந்தால் சொல்லுங்கள் என்று என்னைக் கேட்டார். எல்லா மதத்தையும் தெரிந்து வைத்திருக்கும் அவருக்கு சைவ நூல்கள் இங்கிலீஷில் கிடைத்திருந்தால அதன் வண்டவாளத்தையும் விளக்கி காரித் துப்பியிருப்பார்.

1938ஆம் ஆண்டில ஜாதிஒழிப்பு மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டபோது அதற்கு சம்மதம் தந்து தனது உரையை எழுதி, ''அச்சு போட்டுக் கொடுங்கள்'' என்று மாநாட்டுக்காரர்களுக்கு அவர் எழுதினார். ஆனால் மாநாட்டுக்காரர்கள் அதைப் பார்த்துப் பயந்துபோய் அச்சுப் போடாமல் அப்படியே வைத்துவிட்டார்களாம். அதன்பிறகு அதைப் பெரியார் அவர்களிடம் கொடுத்து வெளியிடும்படிச் சொன்னார்கள். பெரியார் அவர்கள் அதை வாங்கிவந்து தமிழில் மொழிபெயர்த்து 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற பெயரால் ஈரோட்டில் வெளியிட்டார்கள். வேறு எந்த மனிதனுக்கும் துணிவில்லாததைச் செய்ய டாக்டர் அம்பேத்கார் அவர்களாலும் பெரியார் அவர்களாலும்தான் முடியும்.


உண்மையில் ஜாதி ஒழிய வேண்டுமானால் கலப்புமணம் ஒன்றினால்தான் முடியும் என்று முதன்முதல் சொன்னவர் அம்பேத்கார்.

சக்கிலி, தோட்டி இவர்களுடைய பிள்ளைகள் அவரவர் தொழிலைச் செய்யக்கூடாது. எல்லாப் பிள்ளைகளுக்கும் அடிப்படை கல்வி வேண்டும் என்று கூறினார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சாதிஒழிப்புக்கான சட்டத்தை இயற்றியுள்ளார்.

பெரியாருக்கும் அம்பேத்காருக்கும் அதிகமான நெருங்கிய உறவு இருந்தது. அவர் பெரியார் அவர்களிடம் தனி மதிப்பும் பற்றும் வைத்திருந்தார்.

நான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எழுதிய புத்தகங்களை அதிகம் படித்திருக்கிறேன். அவருடைய கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆராய்ச்சித் திறனுடையது.

அவருடைய புத்தகங்களைப் படிப்பவர்கள் தொகை அதிகம்! அவர் மறைவு நம் சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத பெருமநட்டம். அவருடைய தொண்டிற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டுமானால், உங்கள் குழந்தைகளுக்கு அம்பேத்தார் என்றே பெயரிடுங்கள். ●



# டாக்டர் அம்பேத்கர் இந்தியாவின் காரல்மார்க்ஸ்

இரா. குசேலன்

'அறிவு வழி' பகுப்பு—தொகுப்பு அறிவியல் வழியில் சமதர்ம சமூக அமைப்பை நிறுவுவதற்கு பாடுபடும் ஏடாகும்.

பாபாசாகேப் அம்பேத்கார் அவர்கள் தன்னுடைய இறுதிமூச்சு வரை மெய்யான உழைக்கும் மக்களின உற்ற தலைவனாக அரும்பாடு பட்டு பல சாதனைகளை படைத்தவர் என்பதை நாம் அறிவோம் இப்படி பாடுபட்ட பல பெரியவர்கள் இருப்பினும் இவருக்கென ஒரு தனி அம்சம் உண்டு.

அது என்ன?

டாக்டர் அம்பேத்கார் அவர்களை செட்யூல்டு இன தலைவர் என அவரை கணிப்பார்கள். இதில் பாதி உண்மை இருக்கிறது. செட்யூல்டு இன மக்கள் அனைவரும் உழைக்கும் மக்களே. மேலும் இக்கால கட்டத்தில் நான்கு வர்ணங்களிலும் உழைக்கும் மக்கள் இருக்கிறார்கள். நவீன முதலாளித்துவத்தில் இந்நிலை பெருகிக் கொண்டே வருகிறது.

இந்த உழைக்கும் மக்களுக்கும் டாக்டர் அம்பேத்கார் ஒப்பற்ற தலைவர் ஆவார். இன்றைக்கு 8 மணி நேர வேலை உரிமை போன்ற பல்வேறு அடிப்படை உரிமைகளை சட்ட வடிவமாக்கி தந்தவர் டாக்டர் அம்பேத்கார் ஆவார். அவர் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்ட தொழிலாளிகளுக்கு ஆற்றியுள்ள பணிகள் வேறு ஒரு இடத்தில் இத்த இதழில் வருவதால் மீண்டும் அவற்றை இங்கு குறிப்பிடவில்லை.

நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்—குறிப்பாக செட்யூல்டு இன மக்கள் அவர்கள் தங்களுக்குரிய தலைவர் என்று கருதினாலும் செட்யூல்டு இனத்தை சாராத உழைக்கும் மக்களுக்கும் உரிய தலைவர் என்ற விசால பார்வையை பெறவேண்டும்—அதேபோல் செட்யூல்டு இனததை சேராத உழைக்கும் மக்களும் உணர்ச்சி பூர்வமாக தங்கள் வர்க்கத் தலைவனாக பாவிக்க வேண்டும்.

பொதுஉடைமை இயக்கத்தையும், தொழிற் சங்க இயக்கத்தையும் தோற்றுவித்தவர்கள் உயர் சாதிக்காரர்களாக இருப்பதால் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் செட்யூல்டு இன தோழர் என்பதால் அவர்களை அவர்கள் மறைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் அம்பேத்கார் சிலைகளுக்கு மாலை போட்டுவிட்டு அந்த இனமக்களின் வாக்குகளை பெற்றுவிடலாம் என்று நாடகம் ஆடாமல் அந்த பெரியார் பெற்றுதந்த அரசியல் சட்ட உரிமைகளை செட்யூல்டு இனமக்களும் இதர உழைக்கும் மக்களும் அனுபவிக்க செயல்பட வேண்டும். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியாவிற்கு கிடைத்த மார்க்ஸ்—அதாவது அடக்கி ஒடுக்கப் பட்ட உழைக்கும் மக்களுக்கு உரிய இடத்தை பெற்றுதர வழிவகுத்தும், அதற்காக இறுதிவரை பாடுபட்டும் மறைந்த பெரியார் ஆவார். அவர் வழியில் தொடருவதன்மூலமே இந்தியாவிற்கு விடியற்காலம் ஏற்படும்.

'அறிவு வழி' வர்ண பேதத்தையும் வர்க்க பேதத்தையும் ஒழிக்க பாடுபடும் ஏடு. இந்த இரண்டையும் ஒழிக்க பாடுபட்டவர் பெரியார் டாக்டர் அம்பேத்கார். ●



# போராட்ட வீரர் பாபாசாகிப் அம்பேத்கர்

மு. சுந்தரராஜன்

1927-ம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ம் நாள் இந்தியாவில் வாழும் செட்யூல்டு இனமக்கள் வாழ்நாளிலே மறக்கமுடியாத நன்னாள், சரித்திரத்தில் இடம்பெறவேண்டிய பொன்னாள், சமத்துவ சுதந்திர சங்கு முழங்கிய பெருநாள்.

மராட்டிய மாநிலத்திலுள்ள கொலபா என்ற மாவட்டத்தில் சவுதர் என்ற குளத்தில் நாயும், பன்றியும், குதிரையும், ஆடுமாடுகளும் இறங்கலாம் தண்ணீர் குடிக்கலாம். ஆனால் செட்யூல்டு இனமக்கள் அந்த குளத்தின் அருகே போகக் கூடாது, தண்ணீர் எடுக்க, குடிக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த அநீதியை அழிக்க 1927-ம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ம் நாள் மக்களின் தலைவர் தலைமையில் மக்கள் அணி திரண்டது.

மக்கள் தண்ணீர் எடுக்க, குடிக்க பெரும் ஊர்வலமாக சென்றபோது இந்துமத சாதி வெறியர்கள் கற்களால் அடித்தனர், சோடாபுட்டிகளை வீசினர் — இவர்களோடு காவல்துறையினரும் சேர்ந்து பெரும் கொடுமைகளை செய்தனர். குளத்தினருகே செல்லாமல் இருக்க செய்தனர்.

தன்மானம் காக்கவந்த தானைத் தலைவர் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் விடுதலை வீரர்களை கட்டுப்பாடுடன் குளத்தின் அருகே அழைத்து சென்று நிறுத்தினார்.

குளத்தின் அருகே சென்றதும் படையினரின் கண்களெல்லாம் ஆத்திரத்தில் ரத்தசிவப்போடு இருந்தன. அனைவரின் கண்களும் நெருப்பை கக்கிக் கொண்டிருந்தன.

காவல் தலைவனே! எங்களின் உரிமைகளை மானத்தை காக்கவந்த இரட்சகனே! தங்கள் கட்டளை என்ன? எங்கள கண்களை பிடுங்கி உன் கைகளில் தரவேண்டுமா?

இல்லை எங்கள் கழுத்துகளை அறுத்து உங்கள் கால்களில் மலர்களாக தூவட்டுமா? என்று கேட்பவைபோல் இருந்தன. கட்டளைக்கு காத்திருந்தனர். அவர்களின் வீர உறுதியைக் கண்ட இரட்சகர் முழங்கினார்!

விடுதலை வீரர்களே! நாம் இன்று நமது உரிமைகாக்க போராட சித்தமாக இருக்கிறோம். இப்போராட்டத்தின் மூலமாக உலக மக்களின் பார்வையை நம பக்கம் திருப்ப போகிறோம்.

அடிமைகளாக வைத்திருந்தோர்களை சிந்திக்கவைக்க இருக்கிறோம். இதற்காக நாம் எல்லாவித தியாகங்களுக்கும் தயாராக இருக்க வேண்டும்.

எந்தமதம் நம்மை மனிதனாக மதிக்கவில்லையோ இனி நாம் அந்த மதத்தை மதிக்காமல் இருக்க சபதமேற்போம்.

பல ஆண்டுகாலமாக கோழைகளாகவும், அடிமைகளாகவும், தீண்டப்படாதவர்களாகவும், அச்சத்தோடு வாழ்வதைவிட சிறிதுகாலமாகிலும் சுதந்திரம் பெற்று சுயமரியாதை மக்களாக வாழ்வோம் அல்லது செத்து மடிவோம்.

சமத்துவ சுதந்திர சங்கு முழங்க முழக்கமிட்டார். வாழ்வோம் அல்லது சாவோம் என்று கூறி அனைவரையும் குளத்தை சுற்றி நிற்க கட்டளையிட்டார்.

அஞ்சாமல், அசையாமல் நில்லுங்கள். முதலில் குளத்தில் நான் இறங்கி தண்ணீர் குடிப்பேன்! நான் வெளியே வந்தவுடனே ஒவ்வொருவரும் இறங்கி தண்ணீர் குடியுங்கள் என்றார்.

ஜெய்பீம் முழக்கம்!

இதை கேட்டதும் விடுதலை வீரர்கள் அனைவரும் 'ஜெய்பீம்! ஜெய்பீம்! ஜெய்பீம்!' என்று முழக்கமிட்டனர். ஜெய் என்றால் வெற்றி! பீம் என்றால் அவருடைய பெயர் அன்று முழங்கிய முழக்கம்தான் ஜெய்பீம் என்ற முழக்கம். இன்று இது நாடெங்கும் முழங்கிக் கொண்டிருக்கிறது.

அஞ்சாநெஞ்சன்! வீரத்தின் விளைநிலம்! வெற்றியின் திருமகன்! சொல்வதை செய்து காட்டும் செயல்வீரர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள்—மக்கள் ஜெய்பீம்! ஜெய்பீம்! என்று முழக்கமிட, வீறுநடையோடு குளத்தில் இறங்கினார். இரண்டு கைகளாலும் தண்ணீர் எடுத்து குடித்தார்.

அதன்பின் மக்களெல்லாம் சென்று தண்ணீர் எடுத்து குடித்தனர். போராட்டம் வெற்றி! வெற்றி! சனாதனிகளின் தடை உடைத்து நொறுக்கப்பட்டன. சாதி வெறிபிடித்த இந்து மத சனாதனிகளுக்கு இது ஒரு பேரிடியாகும்.

வெற்றிபெற்ற வீரர்கள் மகிழ்ச்சியோடு கிராமங்களுக்கு சென்று கொண்டிருக்கும்போது சனாதனிகள், சாதி வெறியர்கள் நிரபராதி மக்களை தாக்கினர். மண்டைகள் பிளந்தது, ரத்தம் சொட்டசொட்ட ஓடினர். கை, கால்கள் முறிந்தது ஊருக்கு சென்றதும் அங்குள்ள சாதி வெறியர்கள் சமூக கட்டுபாடுகள் விதித்து நிலங்களில் பயிரிடக்கூடாதென்றும், மளிகைக் கடைகளில் மளிகை சாமான்கள் கொடுக்கவும் மறுத்தனர். மக்கள் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இதுதான் நம் இந்திய நாடு!

இந்த நிகழ்ச்சி நடந்து 62 ஆண்டுகள் கடந்தும் இன்னும் இந்த கொடுமைகள் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இதுதான் திராவிடர் ஆட்சி, தமிழர் ஆட்சி!

தமிழ் தளபதிகள், தமிழர்களின் மானத்தை காக்கும் தலைவர்கள் என்றெல்லாம் விளம்பரப்படுத்தி, தமிழ்மக்களின் ரத்தத்தைக் குடித்து சுகபோகத்தோடு வாழும் சுகபோகிகளின் பதில் என்ன?

பாபாசாகிப் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக சிறந்த முறையில ஏற்பாடு செய்து நடத்த திட்டமிட்டுள்ளோர்களுக்கு நன்றி!

பாபாசாகிப் நூற்றாண்டின்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் நூறு, நூறு சிலைகள் வைப்பது பாராட்டுக்குரியதுதான்.

அதைவிட மிக சிறந்தது இறுதியில் அவர் செய்துகாட்டி சென்றதை செய்வதுதான் மிக சிறந்தது—நன்றி கடமையுமாகும்.

14-4-90லிருந்து 14-4-91 வரையிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐம்பதாயிரத்திற்கு குறையாத செட்யூல்டு இனமக்களை பௌத்த மார்க்கத்தில் சேர்க்க வேண்டும். மக்களுக்கு நாம் இந்துக்கள் இல்லை என்பதை தெளிவு படுத்தல் வேண்டும். நாம் பூர்வீக பௌத்தர்களென்பதைக் கூறி பௌத்தர்களாக்க வேண்டும்.

இந்த ஓராண்டில் தமிழ்நாட்டினுள்ள எந்த கிராமங்களிலும் தீண்டாமை இல்லாமலும், செட்யூல்டு இனமக்கள் சிவில் உரிமையோடு வாழ தியாகம் செய்யவேண்டும்.

சிவில் உரிமை சட்டத்தால் பெறமுடியாது. போராடிதான் பெறவேண்டும் ரத்தம் சிந்த வேண்டும். சிறைக்கு செல்லவும், கொடுமைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளவும், தூக்கு தண்டனைக்கும் தயாராக இருக்க வேண்டும்.


இதுதான் பாபாசாகிப் அம்பேத்கருக்கு செய்யும் நன்றி கடனாகும்: சமுதாய நலனுக்கு செய்யும் தியாகமாகும்.

இந்த உரிமைகளைபெற போராட வரமுடியாதவர்கள் போராட்ட வீரர்களுக்கு ஊக்கம் கொடுங்கள், பொருளுதவி செய்யுங்கள்.

சாதியின் பெயரால் கல்வி, உத்தியோக சலுகைபெற்று வாழும் நீங்கள் சாதியை மறைத்து வசழாதீர்கள். வருமானத்தில் நூற்றுக்கு பத்து சதவிகித ஊழியத்தை சமுதாய நலனுக்காக கொடுத்துதவுங்கள்.

குறிப்பு: 14-4-90 சென்னை நேரு அரங்கில் நூற்றாண்டு விழாவின்போது — ஒரு புத்தகம் வெளியிடுகிறோம். இது அனைவரும் படித்து பயன் பெறவேண்டியவை வேண்டுவோர் தொடர்பு கொள்ளும் இடம்:—

மு. சுந்தரராசன்
நெ. 6, நேவல் ஆஸ்பத்திரி சாலை,
2வது தெரு, அம்பேத்கர் நகர்,
சென்னை-600 003.



# அறிஞர் அம்பேத்காரை அறிவோம்!

வே. ஆனைமுத்து

ஏதேனும் ஒரு தத்துவத்தை—கொள்கையை—மக்களின் விடுதலைக்காக அளித்தவர்களை அந்தந்த நாட்டு மக்கள் போற்றிப் பாராட்டுகின்றனர். அப்படிப் போற்றிப் பாராட்டுவதன் அடையாளமாக, அவர்களின் முதன்மையான பிறந்த நாள்களை, 60—75—100 எனக் கணக்கிட்டுக் கொண்டாடுகின்றனர்.

பழங்காலத்தில் மனிதரின் சராசரி வாழ்நாள் 7, 10, 20, 30 என்று இருந்தபோது—ஒருவர் 60 ஆண்டுகள் வாழ்வது அரிதிலும் அரிது என்று கருதப்பட்டது. எனவே 'அறுபதாவது பிறந்த நாளை'க் கொண்டாடும் பழக்கம் மேற்கொள்ளப்பட்டது.

அரசருக்கும், நிலப்பிரபுவுக்கும், மதத்தலைவர்களுக்கும் மட்டுமே கொண்டாடப்பட்ட இந்த விழா, பின்னர் மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுகிற பலருக்கும் கொண்டாடப்பட்டது.

இன்று உலகின் பலப்பல நாடுகளில் நூறு ஆண்டுகள் வாழ்பவர்கள் பல இலட்சம்பேர் உள்ளனர்.

ஆயினும் அண்மைக்காலத்தில், நாம் அறிய நம் சமுதாய விடுதலைக்குப் பாடுபட்டோர் பலர் இன்று இல்லை. ஆனால் அந்த மேதைகள் தந்த கொள்கைகளும், காட்டிய நெறிகளும் நமக்கு வழிகாட்டிகளாக இன்றும் உள்ளன.

தென்னகத்தில் கடந்த 150 ஆண்டுகளில் இராமலிங்கர், அய்யாங்களி, ஸ்ரீ நாராயணகுரு, வேங்கடாசல (நாயகர்), சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் டி மாதவன் (நாயர்), அயோத்திதாச பண்டிதர் ரெட்டைமலை சீனிவாசன், பெரியார் ஈ. வெ. ரா., வீரேசலிங்கம், பாரதிதாசன் போன்ற எண்ணற்ற தலைவர்கள் தோன்றி, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு அவரவர் பங்கை ஆற்றினர்.

அதேபோல், வடபுலத்தில் மகாத்மா ஜோதிராவ் புலே, டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் முதலான பெருந்தலைவர்கள் தோன்றி இந்திய சூத்திர—ஆதிசூத்திர வகுப்பினரின் விடுதலைக்கு அல்லும் பகலும் அயராது உழைத்தனர்.

இந்த மாமேதைகளுள் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நூறாவது பிறந்தநாள் 14-4-1990இலும். பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாள் 29-1-1990இலும் தொடங்குகிறது.

சீரிய பொருளாதார அறிஞரும் — சிறந்த சட்ட மேதையும் — அஞ்சா நெஞ்சினரும் ஆன டாக்டர் அம்பேத்கார் அவருடைய தகுதி ஒன்றின் காரணமாகவே மிகப்பெரிய பதவிகளை அடைந்

தார். அந்தப பதவிகள் காரணமாகத் தன் மக்களை—தன் மக்களைப் போன்று ஒடுக்கப் பட்டவர்களை விடுதலை பெறச் செய்ய வேண்டும் என்ற வேட்கையைக் கிஞ்சிற்றும் விட்டுக்கொடுக்காமல், சுமார் 40 ஆண்டுகள் ஒரு போராட்ட வாழ்க்கைய அவர் வாழ்ந்தார்.

வாய் பேசத் தெரிந்தவர்களை எளிதில், 'உரிமை'க்குக் குரல் கொடுக்கச் செய்யமுடியும். ஆனால் வாய பேசத் தெரியாத ஊமைகளை எப்படிப் பேசச் செய்வது? அடித்துப் பேசச் செய்யமுடியுமா? முடியாது.

எனவே, 'கற்பி!', 'போராடு!', 'ஒன்று சேர்!'—எனத் தெளிவான முழக்கங்களைத் தந்து, ஊமையர்களாகக் கிடந்த செட்யூல்டு மக்களை ஒன்று சேர்த்தார்; அவர்களின் அடிமைத் தளைகள் அறுக்கப்படுவதற்கான அறிவுரைகளைப் புகட்டினார்; அடிமைத் தளைகளை அறுப்பதற்கான போராட்டங்களை நடத்தினார்.

இந்திய சமுதாய அமைப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளுவதற்கு புத்தர், கபீர்தாசர், ஜோதிராவ் புலே ஆகிய மூவரையும் தனக்கு வழிகாட்டியாக அவர் கொண்டார். அன்னாரின் வாழ்நாளில், அவர் கடைசித் தடவையாக ஆக்ராவுக்கு வந்தது 18-3-1956இல்! தனக்கு முன்னோடிகளாக—வழிகாட்டிகளாக மேற்சொல்லப்பட்ட மூவரையும் தாம் வரித்துக் கொண்டதை அங்கே, அன்று அவர் ஆற்றிய உரையில் தெளிவுபடக் கூறினார். வருணாசிரம ஒழிபபுக்கு அவர் மேற்கொண்ட எல்லா வழிமுறைகளுக்கும், அந்த மூன்று முன்னோடிகளையும் வழிகாட்டிகளாக அவர் கொண்டதை, அவருடைய நூறாவது பிறந்தநாளில் நாமும் அறிந்து பின்பற்றுவது இன்றியமையாத ஒன்றாகும்.

செட்யூல்டு மக்களின் சமுதாய—அரசியல்—பொருளியல் விடுதலைக்குப் பாடுபட்ட அன்னாரின் மேதைத் தன்மை நிரம்பிய சட்ட அறிவைப் பயன்படுத்திட எண்ணிய வெள்ளையர் அரசு தான், முதன்முதலில் 1935ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தை (1935 Act) வரைவதற்கு அவரை நன்கு பயன்படுத்தியது. அதே வெள்ளையர் காலத்தில் செட்யூல்டு மக்களுக்கு மைய அரசில், அலுவல்களில் தனி ஒதுக்கீடு பெற அவர் 1943இல் மேற்கொண்ட பெரு முயற்சி, 1943 ஆகஸ்டிலேயே கைகூடியது. இத்தனைச் சாதனைகளுக்கும் சொந்தக்காரரான அன்னாரின் திறமைகளைக் கண்டு, ''இந்திய அரசமைப்பு வரைவுக் குழு''வின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டபோதும் அவர், மேலும் மேலும் செட்யூல்டு மக்களுக்கான உரிமைகளைக் காப்பதில் கண்ணுங்கருத்துமாகப் பணியாற்றினார்.


ஆயினும் தம் தலைமையில் வரையப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பல குறைபாடுகளை உடையது எனக் கண்டபோது, 3-9-1953இல், இந்திய மாநிலங்கள் அவையில், முதன்முதலாக, ''அரசியல் சட்டம் கொளுத்தப்படவேண்டும் என்றால், நான் முதலாவது ஆளாக நின்று அதைக் கொளுத்துவேன்'' என அவர் முழங்கினார். பின்னர் ஒருதடவை, ''அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்பட—நான் ஒரு வாடகைக் குதிரை (Hack or Hackney) போலப் பயன்பட்டேன்'' என மனம் நொந்து அவரே கூறினார். பர்மாவில், 1954 டிசம்பரில் நடைபெற்ற உலக பவுத்தர் மாநாட்டின்போது, ஈ வெ ரா.விடம் நேரில், ''அரசியல் சட்டம் எழுதுகிற பேனாவை நான்தான் பிடித்திருந்தேன என்பது உண்மை. ஆனால் அதை நகர்த்தியவர்கள் பார்ப்பனர்கள்'' என அவரே மனம் வெதும்பிக் கூறினார்.

ஓர் உண்மையான அறிஞருக்குரிய இம் தகைய இயல்புகள் மாமேதை அம்பேத்தாரிடத் பொதிந்து கிடந்தன. இவற்றை நாமும் அறிந்திட வேண்டும். வருணாசிரமத்தின் வெளிப்பாடான தீண்டாமை ஒழிப்புக்கு காங்கிரசிலிருந்த ஈ.வெ.ரா. கேரளாவில் 1924இல் போராடியதை அறிந்த மாமேதை அம்பேத்கார் பெரியாரின் துணிச்சலை அன்றே பாராட்டினார்.

1929இலும், 1930இலும் தமிழ் மாகாண சுயமரியாதை மாநாடுகளுக்கு, ஊ. பு. ஆ. சவுந்தர பாண்டியனையும், பம்பாய் எம். ஆர். ஜெயகரையும் அழைத்த ஈ. வெ. ரா.—1931இல் நடைபெற்ற சுயமரியாதைமாநாட்டுக்கு தலைவராக மாமேதை அம்பேத்காரையே தேர்ந்தெடுத்தார். ''அம்பேத்காரை ஒப்புதல் தரச் சொல்லுங்கள்!'' என வேண்டி, பம்பாய் எம். ஆர். ஜெயகருக்கு ஈ.வெ.ரா. விடுத்த தந்தி இன்றும் இந்திய அரசின் ஆவணக் காப்பகத்தில் காணக் கிடக்கிறது.

இப்படி, அம்பேத்காருக்கும்—ஈ. வெ. ரா. வுக்கும் ஏற்பட்ட தொடர்பின் விளைவாகத்தான், 'சாதியை ஒழிக்க வழி' (Annihilation of Caste) என்கிற அம்பேத்காரின் பேருரையை 1936லேயே தமிழில் மொழியாக்கம் செய்து, இன்றுவரை எண்ணற்ற பதிப்புக்களில் தமிழரிடையே பல பத்தாயிரம் படிகள் அந்நூல் பரவிட வாய்ப்பு உண்டாயிற்று.

அம்பேத்காரின் இந்தவகைத் தொடர்புகளை நாமும் அறிவோம்; நாமும் பின்பற்றுவோம்.



# பாபாசாகிப் அம்பேத்கரின் பாதை இதுதான்

பெரியார்தாசன்

இவ்வாண்டு பாபாசாகிப் அம்பேத்கரின் நூற்றாண்டு, நாடு முழுதும் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் யாராவது ஒரு அறிஞருக்கோ தலைவருக்கோ நூற்றாண்டு வரத்தான் செய்கிறது. நாமும் கொண்டாடிக் கொண்டுதான் இருக்கிறோம்.

வண்ண விளம்பரங்கள்—வகை வகையாய்த் தோரணங்கள்—அலங்கார மேடைகள்—ஆளுயர மாலைகள்—இறந்துபோன நாயகருக்கு ஏராளப் பாராட்டுக்கள்— கூட்டமோ கூட்டம்— எல்லாம் முடிந்து அந்த அறிஞரோ தலைவரோ மறக்கப் படுவதற்குச் சில மாதங்கள் ஆகும்— அப்புறம் எல்லாம் பழையபடிதான்.

ஆனால் பாபாசாகிப் அம்பேத்கரின் நூற்றாண்டு அவ்வளவு இலேசாய் நகர்ந்துவிட முடியாது— நகர்ந்துவிடக் கூடாது.

ஏனென்றால் பிற தலைவர்களுக்கும் இவருக்கும் மிகப் பெரிய வேறுபாடு ஒன்று உண்டு.

பெரும்பாலான தலைவர்கள் சூழ்நிலையால் உந்தப்பட்டு, தம் அறிவால், ஆற்றலால், தொண்டால், தியாகத்தால்—சிலபேர் சூழ்ச்சியால், தலைவராய் ஆவார்கள்.

ஆனால் பாபாசாகிப் அம்பேத்கரோ நோய்க்கு மருந்தாய், பசிக்கு உணவாய், கோடை வெயிலுக்கு நிழலாய்த் தோன்றியவர்— பிரச்னைகளின் தாக்கத்தால் நொந்து மடிய விருந்த செடியூல்டு மக்களுக்காகப் பிரச்சினைகளி லிருந்தே வெடித்துக் கிளம்பியவராய்—வேகச் சூறாவளியாய்— இயற்கையாய்— எளிமையாய்ப் பரிணமித்த தலைவர்.

ஊரிலிருந்து ஒதுக்கப்பட்டு வாழ்கின்ற மக்களின் இத்தலைவர் ஊருக்கு வெளியில் ஒதுங்கிக் கிடந்த நிலையிலிருந்து ஊராளும்-ஏன் பாராளும் நிலைக்கு உயர்ந்தார்.

சட்டை செய்யப்படாத நிலையில் சமூகப் புறக்கணிப்புக்கு ஆட்பட்டிருந்த பாபாசாகிப் இந் நாட்டுக்கே சட்டம் வடித்துத் தரவேண்டிய உன்னத நிலைக்கு உயர்ந்தார்.

கல்வி மறுக்கப்பட்ட இனத்தில் ஒருவராய்த் தோன்றிய பாபாசாகிப் கல்வியின் கரைகண்ட வராய்—உலகப் பெருங் கல்விமான்களில் ஒருவ ராய்த் திகழ்ந்தார்.

பொதுக் குளத்தில் நீரெடுக்கத் தடை விதிக்கப்பட்ட மக்களில் ஒருவராய்த் தோன்றிய பாபாசாகிப் பொதுக் குளத்து நீரைப் போராட்டத் தால் உண்மையில் பொதுவாக்கிய தீரராய் விளங்கினார்.

இந்து மதத்தால் இழிவு படுத்தப்பட்ட மக்களில் ஒருவராய்ப் பிறந்த பாபாசாகிப் இந்து மதத்தின் இழிவுகளை உலகறிய அம்பலப் படுத்தினார்.

சொந்தத் தேசத்திற்குள்ளேயே அகதிகளாய் நடத்தப் பட்ட செடியூல்டு மக்களின் சோதரரான பாபாசாகிப், தேசத்தை அடிமைப் படுத்திய ஆங்கிலேயர்களாலேயே தேசத்தின் பிரதிநிதியாய் அங்கீகரிக்கப்பட்டு இரு முறை இங்கிலாந்தில் நடைபெற்ற வட்ட மேசை மாநாடுகளில் பங் கேற்றார்.

சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாத சண்டியர்களால் சிதறடிக்கப்பட்ட செடியூல்டு மக்களில் ஒருவராய் விளங்கிய பாபாசாகிப் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட மந்திரி யானார்—சமூக நீதிக்குப் பொறுப்பேற்றார்.

இப்படி பிரச்னைகளிலிருந்தே வெடித்துக் கிளம்பி பிரச்னைகளைத் தீர்க்கும பொறுப்பைத் தம்மேல போட்டுக் கொண்டு அவற்றை வெற்றி கரமாய் நிகழ்த்திக் காட்டிய நிகரிலாத் தலைவர் பாபாசாகிப்பின் நூற்றாண்டு இது.

இந்த மாமனிதர்—முழுப் பெருந் தலைவர் பாபாசாகிப்பின் பாதை எது என்பதில இந்திய மக்களின் அனைத்துப் பிரிவினருக்குமே நெருங் குழப்பங்கள் இருந்து வருகின்றன.

காந்திய வாதிகள் அவர் வாழும்போது தொல்லை கொடுத்தார்கள்—இறந்த பிறகு அவரைப் புகழ்ந்து சிலை வைத்து பூசித்து அவர் கொள்கைகளைப் புதைத்துவிடப் பார்க் கிறார்கள்.

இந்து சநாதனிகள் அவரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட இந்து மதத்தைப் பரப்ப தங்களால் வெறுக்கப்படும் செடியூல்டு மக்களையே பயன் படுத்தப் பார்க்கிறார்கள்.

செடியூல்டு மக்களின் சில தலைவர்கள் பாபா சாகிப் பெயரை மட்டும் உச்சரித்துக் கொண்டு அவர் கொள்கைகளுக்கு மாறாக நடந்து தம் தலைமையைத் தக்கவைத்துக்கொள்ள படாத பாடு படுகிறார்கள்.

செடியூல்டு மக்களில் பெரும் பாலானோர் தங்கள் பிரச்னைகளுக்கு பாபாசாகிப் அளித்த தீர்வுகளையோ அவற்றைச் செயல்படுத்தும் உண்மைத் தலைவர்களையோ பின் பற்றாமல் மதவாதிகள் பின்னாலும் அரசியல் சூழ்ச்சிக் காரர்கள் பின்னாலும் அணிவகுத்துக் கொண்டி ருக்கிறார்கள்.

இந்த இழிநிலையை பாபாசாகிபின் நூற் றாண்டான இவ்வாண்டிலாவது மாற்றியாக வெண்டும்—அதற்கு ஒரே வழி அவர் காட்டிய பாதை எது என்பதைத் தீர்க்கமாக நாம் முடி வெடுத்துத் தீர்மானிப்பதும் அதில் பயணம்போக செடியூல்டு மக்களை அணிதிரட்டுவதும்தான்.

உழைப்பை உதாசீனப்படுத்தும்—போலி வேதப் புரோகித பார்ப்பனக் கூட்டத்தை எதிர்ப் பதில் முன்னணியில் நின்றவர் பாபாசாகிப். அந்தப் பார்ப்பனர்கள் இன்னும் மகிமை வாய்ந்த தாய்க் கருதிப் பரப்பும் பகவத் கீதையை 'முட்டாள்களின் உளறல்' என்று பிரகடனப் படுத்தினார் பாபாசாகிப். பார்ப்பன ஆதிக்கத் திற்கு அடியெடுத்துக் கொடுதத அநீதி நூலாம் மனுவின் நூலை மாநாடு கூட்டி எறித்தார் பாபாசாகிப்

ஆக. பாபாசாகிப் தீவிர பார்ப்பன எதிர்ப் பாளர்.

பார்ப்பன எதிர்ப்பு பாபாசாகிப் வழி. அவ ரைப் பின் பற்றுவதாய்க் கருதிக்கொள்வோர் அனைவரும்—குறிப்பாக செடியூல்டு மக்கள் அனைவரும் கடுமையான பார்ப்பன எதிர்ப்பாள ராய் இருந்தாக வேண்டும்.

அறிவியல் நோக்கில் ஆழ்ந்து, உலகத் தோற்றம்— வளர்ச்சி இயக்கம் ஆகியவற்றை நன்கு விளங்கிக் கொண்ட பாபாசாகிப் தீவிர கடவுள் மறுப்பாளராய் விளங்கினார் அதனால் தான் இந்து மதத்தைவிட்டு விலக நேர்ந்தபோது முஸ்லீம் மதத்திற்கோ, கிறித்துவ மதத்திற்கோ மாறாமல் கடவுள் மறுப்பு நெறியாகிய பவுத் தத்தை ஏற்றார்.

ஆக அம்பேத்கறிஸ்டுகள் யாரும் தம்மை இந்துக் கடவுள் வணக்கக்காரராகவோ முஸ்லீம் ஆகவோ கிறிஸ்துவராகவோ ஒருக்காலும் நிலைப் படுத்திக்கொள்ள முடியாது—கூடாது.

சாதிகளின் தோற்றம் இந்து மதத்தின் ஆதிக்கத்தின் விளைவு என்று 1916-லேயே முடிவுக்கு வந்த பாபாசாகிப் அம்முடிவை தம் வாழ்நாள் முடியும்வரை மாற்றவேயில்லை.

செடியூல்டு மக்கள் தாம் ஒரு தனிச்சாதி— இனம் சார்ந்தவர்கள் என்று எண்ணுவதும் அடுத்த சாதியாரின் ஆதிக்கத்திற்கு அடிபணி வதும் துணைபோவதும் நிச்சயம் அம்பேத்கர் கொள்கையாகாது. சாதிமத ஒழிப்பே அவர் கொள்கையாகும்.

சாதி அடிப்படையில் இயங்கும் இந்திய சமூக அமைப்பின் கட்டுமானத்தையே புரட்சிகரமாகத் தகர்த்தெறிவதே அம்பேத்கரீஸ்டுகள் மேற் கொள்ள வேண்டிய பாபாசாகிப் வழியாகும்.

கல்வியும் சமூக அந்தஸ்தும் காலகாலமாய் சாதியின் பெயரால் மறுக்கப்பட்டு வந்த இழி நிலையிலிருந்து விடுதலை பெற பாபாசாகிப் பெற்றுத் தந்த இட ஒதுக்கீட்டை நன்கு பயன் படுத்தி செடியூல்டு மக்கள் கல்வியிலும் உத்தியோகத்திலும் பெருமளவு முன்னேறியாக வேண்டும். இந்தப் பெரும் பணியில் ஏற்கனவே ஏணியில் ஏறிய செடியூல்டு மக்கள் தம் சகோதரர் களை ஏற்றி விடுவது தம் கடமை என்று எண்ணிச்

செயல்பட வேண்டும். ஆக வகுப்புரிமை பாது காப்பு பாபாசாகிப் கொள்கையாகும்.

இந்திய அரசியலில் அறிஞர்களுக்கு இட மில்லை—முட்டாள்களே நிறைந்திருக்கிறார்கள். தியாகிகளுக்கு இடமில்லை—துரோகிகளே ஆதிக் கம் பெறுகிறார்கள்.'' என்றார் பாபாசாகிப்.

இந்தப் போலித் தேர்தல் அரசியலைப் புறக்கணித்துச் சமதர்ம ஆட்சி அமைக்க முனை வதே பாபாசாகிப் அம்பேத்கரின் வழி.

சமூக சமத்துவம் பொது உரிமையும் பெற செடியூல்டு மக்கள் போராட வழி வகுத்தவர் பாபாசாகிப். அந்த விடுதலையைப் பெற செடியூல்டு மக்கள் நடத்தும் போராட்டங்களில் முற்போக்காளர்கள் அனைவரும் பங்கு பற்றியாக வேண்டும்.

ஆக பாபாசாகிப் அம்பேத்கரின் பாதை இதுதான்.

அறியாமை ஒழிய பகுத்தறிவைப் பயன் படுத்துவது.

தீண்டாமை ஒழிய பொது உரிமைக்காகப் போராடுவது.

வறுமை ஒழிய சமதர்ம ஆட்சி அமைப்பது.

இந்தப் பகுத்தறிவுச் சமதர்ம இயக்க நெறியே பாபாசாகிப் அம்பேத்கரின் பாதை.

இப்பாதையில் பயணம் செல்ல அனைத்து செடியூல்டு மக்களையும், முற்போக்காளர்களை யும், பெரியாரியலாளர்களையும், பகுத்தறிவுச் சமதர்மவாதிகளையும் பாபாசாகிப் அம்பேத்கரின் நூற்றாண்டில் அழைக்கிறோம்.

இணைவோம்! வெல்வோம்!

□□□

## தோழர் என். வி. ஜெயசீலன் லண்டன் பயணம்

செடியூல்டு மக்கள் விடுதலை இயக்கத்தை சேர்ந்த தோழர் என். வி. ஜெயசீலன் அவர்கள் லண்டன் நகரில் பாபாசாகேப் அம்பேத்கர் அவர் களின் நூற்றாண்டு விழா 14-4-90ல் நடப்பதில் கலந்துக்கொள்ள சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து 12-4-90 அன்று இரவு 8-30 மணிக்கு பயணமாகிறார்.

தோழர்கள் விமான நிலையத்திலிருந்து வழி அனுப்பி வைப்பார்கள்.

## நூல்களின் வாசலில்...

''டாக்டர் அம்பேத்கர்''

வாழ்க்கை வரலாறும்

ஷெட்யூல்டு மக்கள் பிரச்சனையும்

ஆசிரியர் : ஏ.எஸ.கே. அவர்கள் எழுதிய அரியதொரு நூல.

விலை ரூ. 5—00

பாபாசாப் அம்பேட்கரின் வாழ்க்கை வரலாற்றை, செட்யூல்டு மக்களின் சமூகப் பிரச்சனையோடு ஒப்பிட்டு ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ள மிகச் சிறந்த நூல.

அம்பேத்கர்வாதிகள், பகுத்தறிவுவாதிகள், பொதுவுடைமைவாதிகள் அனைவரும் கட்டாயம் பயில வேண்டிய நூல.

முகவரி :

தோழர் நாகை கே. முருகேசன்
பகுத ஹவுஸ
204, பிரகாசம சாலை,
சென்னை-600 1 8.

□ □ □

அண்ணல் அம்பேத்கர்

பொன்மொழிகள் 100


ஆசிரியர் : கூத்தரசன்

விலை ரூ. 4—00

எந்த ஒரு அம்பேத்கர்வாதியும், சொற் பொழிவாளரும், செயல்வீரரும் அண்ணல் அம்பேத்கர் கருத்துக்களை, அவர்தம் கொள்கை களை விளங்கிக்கொள்ள சிறந்த தொகுப்பு நூல்.

கிடைக்குமிடம் :

அகில இந்திய அம்பேட்கர் மிஷன்
மலையடிவாரம்,
சொரத்தூர் அஞ்சல்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.



# பல்துறை அறிஞர் டாக்டர் அம்பேத்கார்

நெ. து. சுந்தரவடிவேலு
சிறப்பாசிரியர்—'அறிவு வழி'

டாக்டர் அம்பேத்கர் அறிஞர்—பல்துறை அறிஞர்—கல்விக் கடலுக்குக் கரையில்லை என்று உணர்ந்தவர்.

எனவேதான் புதுப்புது நூல்கள் வரவர, அவற்றைச் சுடச்சுடப் படித்தவர்.

பிள்ளைப் பருவத்தில் பல தொல்லைகளுக் கிடையில் படித்தார். பெரிய குடும்பத்தில்—சுற் றுப்புறச் சந்தடியில்—கவனம் சிதறாமல் படித்து மேதையானார்.

வண்டியில் பள்ளி செல்கையில்— சாதி காரணமாய் வண்டி ஓட்டுநரால் இகழப்பட்ட வேளையில் பலகல் தொலைவில் நடந்தே பள்ளி சென்று படித்தார்.

படிக்கும் பருவத்தில் அவர் படிப்பிற்கே முன்னுரிமை தந்தார். சிறந்த மாணவர்களில் மிகச் சிறந்து விளங்கினார்.

அவரளவு கற்றறிந்த மேதை, அவர் காலத் தில் வேறு எவரும் இல்லை. பல பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டமும் பிறபட்டங்களும் பெற்றார்.

தாம் இவ்வாறு மிக முயன்றுபெற்ற கல்வி யின் ஆற்றலை செடியூல்டு மக்களின் விடுதலைக் கான போராட்டத்திற்கே பயன்படுத்தினார்.

தமது உயர் கல்வியை— உன்னத அறிவை பொதுத் தொண்டிற்கே பயன் படுத்தினார்.

தீண்டாமை என்பது சட்டப்படி குற்றம் என்ற சூழலை தம் அறிவால் ஆற்றலால் நம் நாட்டில் உருவாக்கினார்.

மாணவர்கள் அனைவருக்கும் டாக்டர் அம்பேத்கரின் கல்வி வாழ்க்கை அரியதொரு வழிகாட்டி,

அவருடைய சமூகத் தொண்டு கற்றவர் களுக்கு ஒரு முன்மாதிரி.


மாணவர்களே! டாக்டர் அம்பேத்கரின் நூற் றாண்டில் அவரைப் பின்பற்றி சிறந்த மாணவர் களாய் உருவாக உறுதிக் கொள்ளுங்கள்.

நாட்டு மக்களே! நம் நாட்டில் தொடக்கக் கல்வி—தொடர்கல்வி ஆகிய அனைத்து நிலை களும் வலிவுபெற உழைக்க பெருங்கல்வியாளர் டாக்டர் அம்பேத்கரின் நூற்றாண்டில் உறுதி மேற்கொள்ளுவோம்.

எல்லோரும் கற்போம்!

எல்லோரும் போராடுவோம் !!

எல்லோரும் ஒன்று சேர்வோம் !!!



# பாபாசாகேப் அம்பேத்கர் இந்தியாவின் பெரியார்

கோவை கு. இராமகிருஷ்ணன்

1970 முதல் தந்தை பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு அவற்றைப் பரப்புவதிலும் செயல்படுத்துவதிலும் முழுநேரத் தொண்டனாய் இயங்கிவரும் எனது களப்பணிகளில் சில நேரங்களில் சில சிக்கல்கள் எழுவதுண்டு.

அவற்றைத் தீர்க்கும் முயற்சிகளில் நான் தந்தை பெரியாரின் சிந்தனைகளில் சிக்கல்களுக்கான தீர்வுகளைத் தேடுவேன்.

இவ்வாறான சிக்கல்களில் அடிக்கடி என்னை அலைக்கழிப்பது இந்திய சாதி அமைப்பும்—செடியூல்டு மக்களின் பிரச்சினைகளும் பற்றியதாகும்.

என் இயக்கப் பணிகளில் நான் சந்தித்த பல பெரியவர்கள் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பகுதி பகுதியாய்ப் பிரித்துக்கொண்டு ஒவ்வொருவரும் சில பகுதிகளுக்கு அழுத்தமும் மற்றவற்றிற்குப் புறக்கணிப்பும் தருவதைக் கொண்டு நான் குழப்பமும் வேதனையும் அடைந்திருக்கிறேன்.

சிலபேர் கடவுளையும் மறுப்பார்கள்—சாதி உணர்ச்சியையும் விடமறுப்பார்கள்.

சிலபேர் பார்ப்பனரை எதிர்ப்பார்கள்—தம் சாதிக்கு இதயத்தில் தனியிடம் ஒதுக்கிவைப்பார்கள்.

சிலபேர் சாதியை ஒழிக்கவேண்டுமென்பார்கள்—அதே மூச்சோடு வகுப்புரிமை தேவையற்றது என்பார்கள்.

சிலபேர் இந்துமதத்தை எதிர்ப்பார்கள்—இஸ்லாமுக்கும் கிறித்துவத்துக்கும் மறைமுக ஆதரவளிப்பார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாய்ச் சிலர் கடவுளை மறுத்து—பார்ப்பானை எதிர்த்து—சாதி மதத்தை வெறுத்து—வகுப்புரிமையை ஆதரித்து முழங்கிவிட்டு முதலாளித்துவத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் ஆதரவாக சமதர்மத்தை வெறுப்பார்கள்—ஜனநாயகத்தைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள்.

இவர்களெல்லோருமே தங்களைப் பெரியார் இயக்க முன்னோடிகள் என்றே மக்களிடம் கூறிக் கொள்வார்கள்.

இத்தகைய முரண்பாட்டாளர்களில் முற்றிப் போன சில பெரியாரிஸ்டுகள் இருக்கிறார்கள்.

"செடியூல்டு மக்கள் திறமையற்றவர்கள்—நன்றியுணர்ச்சி அற்றவர்கள்—அவர்களுக்காகப் பெரியார் பட்டபாடெல்லாம் வீணாகிவிட்டது" என்று கூறி அந்த மக்களை ஏளனம் செய்வார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் சிக்கித் திணறிச் சித்திரவதைப் படும்போதெல்லாம் எனக்கு ஏற்படும் சிக்கல் இதுதான்.

யாரிந்த செடியூல்டு மக்கள்?

இவர்களின் தனிப்பட்ட பிரச்னைகள் யாவை?

இதைத் தீர்க்க வழிகள் உண்டா? அவற்றைக் காட்டியவர் யார்? அந்த வழிகள் யாவை? பெரியாரிஸ்டுகளாகிய நமக்கு இதில் உள்ள கடமைகள் யாவை?

இந்த வினாக்கள் எனக்குள் எழும்போது நான் இவற்றிற்கான விடைகளைத் தந்தை பெரியாரின் சிந்தனைகளிலிருந்து தேடுவேன். அவற்றிலிருந்து கிடைத்த விடைகள் இவை தான்:—

இந்தியா முழுவதும் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும்—என்ன மொழி பேசினாலும் கடுமையாக உழைத்து—மிகக் குறைந்த கூலிபெற்று—இழிவான தொழில்களில பரம்பரை பரமபரையாய் ஈடுபடுத்தப்பட்டு—பிறப்பினாலேயே இந்துமதத்தவரால் தீண்டாதாராக்கப்பட்டு — ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்டு வாழ்பவர்களே செடியூல்டு மக்கள்.

அவர்களில் சிலர் காலஓட்டத்தில் இஸ்லாமியராகவோ—கிறித்தவராகவோ மாறிய பின்னும் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபடவில்லை. செடியூல்டு மக்கள் இந்தியாவின் பெரும்பான்மை மக்களைப் போலவே உணவு, உடை, இருப்பிடம், கல்வி, மருத்துவம், வேலை, கூலி ஆகிய எந்த உத்தரவாதமும் அற்றவர்களாய் வாழ்கிறவர்கள்.

இதோடு தனிப்பட்ட வகையில் செடியூல்டு மக்களுக்கு பொதுக்கோயில் வழிபாடு—பொதுக்குளத்தில் நீரெடுத்தல் — பொதுச்சாலையில் காலணிகளோடு நடத்தல் ஆகிய பொதுஉரிமைகளே மறுக்கப்படுகின்றன. கிராமத்துத் தேநீர்க் கடைகளில் அவர்களுக்குத் தனி குவளைகள் வைத்து அவர்கள் அவமானப்படுத்தப படுகின்றனர்.

இழிவான வேலைகளான மலம் சுமத்தல்—செத்தமாட்டை அப்புறப் படுத்தல்—பறையடித்தல் ஆகிய வேலைகள் செய்ய செடியூல்டு மக்களில் சில பிரிவினர் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இவைகளே செடியூல்டு மக்களின் இன்றைய தனிப்பட்ட பிரச்னைகள்.

ஏறத்தாழ ஒரே சமுதாய வாழ்நிலையும், பொருளாதார இடர்பாடும் இருந்தாலும் கிராம அளவில் செடியூல்டு மக்கள் பிற்படுத்தப்பட்டோரால் சமூக அந்தஸ்தில்லாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

இந்தக் கேட்டைத் தீர்க்கமுடியுமா? முடியும். எப்படி? இதற்கான அரிய வழியைக்காட்டிய மாமேதையே பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர். அவரே இந்தியாவின் பெரியார்.

அவரைப்பற்றி தந்தை பெரியார் 16-5-1952 விடுதலை இதழில் எழுதியது பெரியாரிஸ்டுகள் அனைவரும் ஊன்றிப்படித்து உணரவேண்டிய செய்தியாகும்.

தந்தை பெரியார் இந்தியாவின் பெரியாராம் பாபாசாகிப் அம்பேத்கரின் பணிகளின் கடுமையைத் தன் பணிகளோடு ஒப்பிட்டுக் கூறியது இதுதான்:

"1925ஆம் வருஷத்திலே இந்நாட்டில் (தென்னாட்டில) சுயமரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால அவ்வளவு கஷ்டமல்ல; மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்துவந்திருக்கிறது என்பதால. ஆனால், வடநாட்டில் அப்படியல்ல வடநாட்டில இருக்கிற இந்த பேதத்தைப்பற்றி, இழிசாதித் தன்மையைபபற்றி யாரும கவலைப்படுவதில்லை. சூத்திரன, பஞ்சமன் என்றால் ஏதோ 'திவான்பகதூர்', 'ராவ்பகதூர்' பட்டம் போன்ற பட்டம் எனபதாகக் கருதிக்கொண்டு இருக்கற மக்கள் வாழும் நாடு அது. அங்கு இந்த உணர்ச்சியை கிளப்புவதென்றால் கடினமான காரியமாகும். ஆனால் அங்கேயே, 1927, 1928லேயே அம்பேத்கர் சுயமரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார் நாசிக்கில் கூடிய ஒரு மாநாட்டிலே இராமாயணத்தைப் போட்டுக் கொளுத்தியிருக்கிறார்."

இவ்வாறு தந்தை பெரியாரால் போற்றிப் பாராட்டப்பட்ட இந்தியப் பெரியார் பாபாசாகிப் அம்பேத்கரின் நூற்றாண்டு இது. தமிழர்களாகிய நாம் இவ்வாண்டில் பெரியார் காட்டிய வழியில் விடுதலைபெற ஒரேவழி பார்ப்பன எதிர்ப்பு —கடவுள் மறுப்பு —சாதிமத ஒழிப்பு—வகுப்புரிமை பாதுகாப்பு — சமதர்ம ஆட்சி அமைப்பு ஆகிய பகுத்தறிவுச் சமதர்மப் பாதையில் பயணப்படுவதேயாகும்.

இதோடு நம் சகோதர செடியூல்டு மக்களை இந்தியப் பெரியார் பாபாசாகிப் அம்பேத்கர் வழியில் விடுதலை பெறக் கற்பித்து — போராடி — ஒன்று சேர்ந்து சமதர்மப் போராட்டத்தில் அனைவரும் ஈடுபடுவதே நம் இலக்காகும்.

இவ்விலக்கை அடைய பெரியாரிஸ்டுகளாகிய நாம் பாபாசாகிப் அம்பேத்கரின் நூற்றாண்டில் உறுதி எடுத்துக்கொள்வோம்.



# புதுத்தத்துவமே! பாபாசாகிபே!

—வாசுகி பெரியார்தாசன்

சூரியனைச்
சுண்டக் காய்ச்சிச்
செய்துவைத்த
ஸ்படிகக் கண்ணாடிநீ!

உன்னில் பார்த்தே
எங்களை நாங்கள்
அறிமுகப்
படுத்திக் கொண்டோம்!

நகரத்தின்
ஒதுக்குப்புறத்தில்
சாக்கடையோரத்தில்
கிராமத்தின்
விளிம்புகளில்
சுடுகாட்டருகில்
வசித்து வருகிறோம்.

ஆலைகள் வெளியிடும்
அசுத்தப் புகையும்
பிணங்கள் வேகும்
பிரேதப் புகையும்
கலந்த காற்று
எங்களின் சுவாசக்
குழல்களில் புகுந்தே
தம்மைச்
சுத்திகரித்துக் கொள்கின்றன.

எங்கள் பிள்ளைகள்
விளையாடி மகிழ
வெள்ளைக் கிலுகிலுப்பைகளை
இடுகாட்டுப்
புதைகுழிகளிலிருந்தே நாங்கள்
எடுத்துக் கொள்கிறோம்.

மலைகளில் ஏறி
மாடுமேய்த்தாலும்
மடுக்களிலேதான்
எங்களின் வாழ்க்கை.

நாங்கள் போட்ட
சாலையில் நாங்கள்
நடக்க அனுமதி
கிடைப்பதே யில்லை.

நாங்கள் செய்த
செருப்புகள் அணிந்து
நடக்கும் வாய்ப்பு
எங்களுக்கில்லை.

செத்த எருமையின்
தோலைக் கிழித்து
முரசுகள் செய்து
அடிக்கிற எங்கள்
முதுகுத் தோலைக்
கிழித்து முரசுகள்
செய்தடிப்பவரும்
இங்கே உண்டு.

காசுகொடுத்துத்
தேநீர்கேட்கையில்
தனிக்குவளைகளில்
தேனீரோடு
அவமானத்தையும்
சேர்த்துக் குடிக்கிறோம்.

இத்தனை தொல்லைகள்
எமை அலைக்கழிக்கையில்
இழிவுக் கடலில்
நாங்கள் அமிழ்கையில்
படகாய் எமக்குப்
பாதுகாப் பளித்துக்
கரை சேர்த்திடவே
காலமும் உழைத்த
மனிதத் துவமே!
புதுத் தத்துவமே!

நீங்கள் தோன்றி
ஒரு நூற்றாண்டு
நகர்ந்த இந்நாளில்
எங்கள் நினைவெலாம்
உங்களால் நிறைந்தது!

நீங்கள் எமக்காய்
யுத்தம் தொடுத்து
தோற்கச் செய்த
இந்து மதத்தை முழுதாய்
வீழ்த்தி வெல்ல
வாகை சூட
இன்று உறுதி
எடுத்துக் கொள்கிறோம்!

சாதிபேதக்
கிருமிகளனைத்தையும்
முற்றாய் ஒழிக்க
சமத்துவ மருந்தை
எங்கும் தெளிப்போம்!

அறிவுத் தெளிவை
அகற்றும் பைத்திய
இறை தத்துவத்தை
முழுமையாய் ஒழிக்க
அறிவியல் வாழ்முறை
ஏற்றுச் சிறப்போம்!

மதங்கள் அனைத்தும்
மடமைப் பொக்கிஷம்,
சுட்டுப் பொசுக்கஉம்
அறிவுச் சுடரை
ஏந்தித் திரிவோம்!

பொதுஉரிமைப்போர்
நடத்துவோம். இறுதியில்
வெற்றிக் கனியாய்
விடுதலை பெறுவோம்!


எமது
கண்ணீரைத் துடைக்கும்
கைவிரலே! உம்
கருத்து நெருப்புச்
சுவாலையால்
எம்மைச் சூழ்ந்த
இடர்களை எரிப்போம்!

வியர்வையை விற்கும்
சோதரர் எவரும்
எமக்கு இங்கே
அயலவர் இல்லை
அறிவோம் இணைவோம்!
எங்களைச் சுரண்டும்
ஈனரை வீழ்த்தி
சமதர்மத்தை
இங்கே விதைப்போம்!
இன்றே விதைப்போம்!

# போதிசத்வர் அம்பேட்கரும் பொதுவுடைமைத் தத்துவமும்!

மு. பா. எழிலரசு

[13]



''எந்தந் தேசத்திலும், தொழிலாளர் பரம்பரை முறையில் ஒருவர்மேல் ஒருவராக வகுக்கப்பட்டிருக்கவில்லை. அவரவர் விருப்பத்துக்கு தக்கபடி தொழில் பாகுபாடு ஏற்படுத்தப்படவில்லை....!''

— பாபாசாகேப் அம்பேட்கர்.

[நூல் : சாதியை ஒழிக்க வழி....பக்கம் 40]

இந்திய தேசத்தில், சமதர்ம ஆட்சி அமைய வேண்டுமென்று தெரிந்தோ தெரியாமலோ பேசிக் கொண்டிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் அதற்கான நிலைக்களனாய் தொழிற்சங்கங்களையே இன்றுவரை நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தொழிற்சங்கத்துள் அடைந்து கிடக்கும் தொழிலாளவர்க்கம் அந்தச் சிகப்புச் சிந்தனையினபால் ஈர்க்கப்பட்டுள்ளதா?—என்று பார்ப்போமானால் இல்லை என்றுதான் பதில் கிடைக்கிறது.

ஏனெனில் தொழிலாளர்களுக்கு ''சமதர்மச் சித்தாந்தத்தை''ப் போதிப்பதைவிட ''சம்பள உயர்வு''பற்றியே சதா பேசிக்கொண்டிருப்பதால் அவர்தம் நெஞ்சக் குழியில் ''பொதுவுடைமைப் பயிர்'' விளைவதற்குப் பதிலாக, சுயநலக் களை முளைத்து, சமுதாயக் கழனியைய தத்துவ வறட்சியெனும் தரிசுநிலமாகிக் கொண்டிருக்கிறது.

ஆம். தொழிலாளவர்க்கம் தெரிந்துகொள்ள வேண்டிய—அவர்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் சமூகக் கலாச்சாரச் சீரழிவைப் பற்றியோ—அதை செப்பனிடவேண்டிய அவசியத்தைப்பற்றியோ—இதைச் சீர்படுத்தவேண்டி தம வாழ்வையே அர்ப்பணித்த தலைவர்களைப் பற்றியோ, பாட்டாளிகளிடம் இவர்கள் போதிப்பதில்லை.

இதற்கு மாறாக, உடன்பாடுகளை எடை போடாமல், முரண்பாடுகளை மட்டுமே படம் பிடித்துக்காட்டி தொழிலாளவர்க்கம திசைமாறிச் செல்ல இவர்களே துணை ரோகிறார்கள்.

உண்மையைச் சொல்லப்போனால், தொழிலாளியாய் இருப்பது தன் தலையெழுத்து என்ற மூடநம்பிக்கையில மதிமயங்கிக் கிடககும் தொழிலாளியைத் தெளிவுபடுத்தி அவனது உடல் உழைப்பை உறிஞுசுகின்ற ஒருவன முதலாளியாயிருப்பது அவன் செய்த முற்பிறவி பலனல்ல என்ற உண்மையை உணரவைக்க வேண்டுமானால கடவுளைப்பற்றியும்—குறிப்பாக இங்குள்ள இந்துமதத்தைபற்றியும—அது வகுத்துளள சாதியத்தைப்பற்றியும்—அந்த சாதியததின தீமைகள்

பற்றியும்—இத்தீமைகளே சமதர்ம ஆட்சிவரா தடையாக உள்ளது என்பதுபற்றியும் இவர்களிடம் எடுத்துரைத்தே ஆகவேண்டும்.

ஏனெனில் தங்களுக்குள்ளேயே பிறப்பினால் எழுந்துள்ள உயர்வு தாழ்வை கற்பித்துக் கொண்டு பிளவுபட்டுக் கிடக்கும் உழைக்கும் வர்க்கம், ஓரணியில் ஒருங்கிணைய வேண்டுமானால் அந்தச் 'சாதிப் பிரிவுகள் ஒரு சதிச் செயல்' என்பதையும்—இதைச் சீர்படுத்தி நாமனைவரும் 'சரிநிகர் சமமானவர்' என்ற சித்தாந்தத்திற்கு சொந்தக்காரர்களாக வேண்டுமென்ற போதனையையும் அவர்களுக்கு ஊட்டவேண்டியது ஒவ்வொரு மார்க்சியவாதியின் மறுக்கமுடியா கடமையாகும்.

இவ்விதப் பாடத்திட்டத்தை தொழிலாளர்கள் நெஞ்சத்தில் புகுத்தும்போது இந்தச் சாதி முறையை தகர்த்தெறிய தன் வாழ்நாள் முழுவதும் போராடி, இதற்கெனவே ஒரு தனி இயக்கம் கண்டு, அதன்மூலம் பாதிக்கப்பட்ட தம் மக்களுக்கு தனித் தகுதிகளையும் தொகுதிகளையும் பெற்றுத்தந்த பாபாசாப் அம்பேட்கரைப் பற்றி இவர்கள் பேசித்தான் தீரவேண்டும்.

ஏனெனில் உலகத்தின் எந்த ஒரு நாட்டை எடுத்துக்கொண்டாலும் அங்கு 'தொழில்' என்பது ஒருதனி மனிதனின் விருப்பு வெறுப்பைப் பொறுத்தது.

ஆனால் இந்தியாவில்மட்டும் தொழில் என்பது ஒருவனின் பிறப்பைப் பொறுத்தது.

இந்த மிகப்பெரிய மாறுபாட்டைக் கட்டாயம் நம்கவனத்தில் கொள்ளவேண்டும்.

அவ்விதம் நம் கவனத்தில் கொண்டால்தான் பாபாசாப் அம்பேட்கரின் சமூகப் போராட்டமே இந்தத் தொழில்களை மையப்படுத்தித்தான்—என்ற கருத்தோட்டத்தை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஆம். தான் பிறந்த சமூகத்தை இந்தந்த வேலைகளைச் செய்யவேண்டும், அதுவும் சமுதாயத்தில் கேவலமாக—இழிவாகக் கருதப்படும்—கடைநிலைப் பணிகளைமட்டுமே செய்யவேண்டும் என்ற கட்டாயப்படுத்துகின்ற மானுடத்தன்மையற்ற சட்டங்களை உடைத்தெறியவே அவரது போராட்டம் பிறந்தது.

இதுமட்டுமல்ல....தான் பிறந்த சமூகம் வேறு எந்தத் தொழிலிலும் ஈடுபடக்கூடாது என்றிருந்த தடைகளைத் தகர்த்தெறியவும் அவரது போராட்டம் துவங்கியது.

இந்தியத் தொழிற்சங்கங்களை, கம்யூனிஸ்டுகள் கையகப்படுத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் பிறப்பினால் திணிக்கப்பட்டுள்ள தொழில்களைப் புறக்கணிக்கவும் அதிலிருந்து விடுபடவும்—விரும்பிய வேலையை செய்யும் உரிமையை மீட்கவும்—தனித்திருந்த தன் மக்களுக்கு தலைமையேற்று பாடுபட்டுக்கொண்டிருந்த ஒரு பாட்டாளித் தலைவன் பாபாசாப் அம்பேட்கர்.

ஒருவனது தொழிலை வைத்து சாதியைச் சொல்லவும்—சாதியை சொன்னால் தொழிலை வைக்கவும் என்றிருந்த நிலையை அசைத்துவிட்ட பாபாசாப் அம்பேட்கரை இந்தத் தொழிற்சங்க கம்யூனிஸ்டுகள் எண்ணிப் பார்க்கவேண்டியது அவசியமல்லவா..?

ஆனால் இங்கு நடப்பதென்ன....?

மார்க்ஸிய சித்தாந்தத்திற்கு ஆதரவான மூலக் கருத்துக்களில் ஒரு முக்கிய பகுதியான 'தொழில்' சம்பந்தப்பட்ட பிரச்சனையை மையப்படுத்தி போராட்டக் களம் கண்ட பாபாசாப் அம்பேட்கரை முதலாளித்துவ சிந்தனையாளர் என வர்ணித்தும் அவரது தொண்டுகளைக் கூட திசைமாற்றி விமர்சித்தும், இந்தியக் கம்யூனிஸ்ட்கள் நடந்து கொள்வதால் தங்களது கொள்கையினை தாங்களே கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சரி இதுதான் போகட்டும்.

''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கத்தையும், தொழிலாளர் தோழருக்கு வீர வணக்கத்தையும் ஏறெடுக்கும் இவர்கள், பாபாசாப் அம்பேட்கரை மட்டும் போற்றுவதில் என்ன கூச்சம்....?

ஏன்....'பாபாசாப் அம்பேட்கர் பாட்டாளி நலனுக்காக எதுவுமே பாடுபட வில்லையா....?

அல்லது அவரால் தொழிலாளர் உலகம் என்னென்ன பலன்களைப் பெற்றது என்பதுதான் இவர்களுக்குத் தெரியவில்லையா....?

அல்லது தெரிந்திருந்தும் அச்செய்திகளை எடுத்துரைக்க மனம் வருவதில்லையா....?

இந்தக் கேள்விகளை எழுப்பிய பின் நாமும் வீணே புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எனவே பாபாசாப் அம்பேட்கருக்கும்—தொழிலாளர் நலனுக்குள்ள தொடர்பை நாமாவது சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

இந்தியத் தொழிலாளர்களின் கடந்த கால வரலாறே சோகக் கறை படிந்த சம்பவங்களின் தொகுப்புத்தான்.

அந்தச் சோகத்தை நீக்கிய சரித்திரத்திற்கு சொந்தக்காரன் யார்....?

பொய்மையின் தாலாட்டில் சில நேரம் உண்மைகளும் உறங்கி விடுவதைப் போல்.... சாதனைப் படைத்த அந்தச் சான்றோனின் புகழ் கூட சித்தாந்தப் போர்வைக்குள் சிறை வைக்கப் பட்டுள்ளது.

அவரது வாழ்க்கை வரலாற்றின் புகழ் மிக்க அத்தியாயங்களில் ஒன்று.... 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற தத்துவத்திற்கு உயிர் கொடுத்த தீரச்செயல்.

**வாட்டன் நிலம் :**

மகாராஷ்டிர மாநிலத்தில், கிராம இழிவு வேலைகளைச் செய்யும் செட்யூல்டு சமூகத்தைச் சார்ந்த ஒருவனுக்கு புறம்போக்குப் பகுதியில் 'கைத்துண்டு' நிலத்தை கொடுத்திருப்பர்.

பட்டா இல்லாத இந்த நிலத்தை அவன் பயன் படுத்துவதாலேயே அவனது பரம்பரை முழுவதும் கிராமத்திற்கு கொத்தடிமைகளாக இருந்து வேலை செய்யவேண்டும். இதுதான் வாட்டன் முறை.

தனக்கு உரிமை இல்லாத நிலத்திற்காக ஊருக்கே அடிமையாக இருக்க வேண்டிய கொடுமையான இந்த வாட்டன் முறையை எதிர்த்துக் குரல் கொடுத்து, அந்த அடிமைத் தனத்திலிருந்து அவனை மீட்கவும், அந்த நிலத்தை 'வாட்டனர்களுக்கே சொந்தமாக்கவும்' பாபாசாப் அம்பேட்கர் எடுத்த முயற்சிகள் ஏராளம்.

இவர்களுக்கான 'வாட்டனர் சங்கம்' அமைத்து, கோரிக்கை வைத்து, ஊர்வலம், மாநாடு நடத்தி பம்பாய் சட்டமன்றத்தில் இது சம்பந்தமாக 19-3-28, 3-8-28, 17-8-37ல் மூன்று முறை மசோதாவை தாக்கல் செய்து, ஏன அனைத்து வழிகளிலும் ஏறத்தாழ 27 ஆண்டுகள் இடைவிடாது போராடி 1956ல் வெற்றித் தேடித் தந்து வாட்டனரின் வாட்டம் போக்கி அவர்களை மானத்தோடு வாழ வைத்த தலைவர்தான் பாபாசாப் அம்பேட்கர்.

''உழுபவனுக்கே நிலம் சொந்தம்''—என்று ஊரெல்லாம் பேசிக் கொண்டலையும் இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்கு இச் செயல் பொதுவுடைமைத் தத்துவத்தின் ஒரு பகுதி என்பது புரிய வில்லையா....?

**கோட்டி—ரயத்துவாரி வரி முறை :**

சிறு ஏழை விவசாயிகள் தங்கள் விளைச்சல் களின் பெரும்பகுதியை, ஏஜெண்டுகளிடம் வரி யாகப் பறிகொடுக்கும் கொடிய செயல்தான் கோட்டி முறை.

இதன்மூலம் நிலத்தில் பாடுபட்டு, கிடைத்த சொற்ப பலனைக்கூட, வீட்டிற்கு கொண்டு வர முடியாமல் வழியிலேயே தரகர்களிடம் வரிகளாக கொடுத்து விட்டு, மீண்டும் வயிற்றுப் பசியைப் போக்க வருடம் முழுதும் உழைத்துக் களைத்து வறுமையிலேயே செத்துக் கொண்டிருந்த ஏழை விவசாயிகளின் துயர் துடைக்க துணை நின்றவர் பாபாசாப் அம்பேட்கரே.

ஏஜண்டுகளிடம் வரிகொடுக்கும் கோட்டி முறையை ரத்து செய்து, விளைச்சனுக்குத் தக்கபடி.... அரசுக்கு தாங்களே நேரடியாக வரி செலுத்தும் ரயத்துவாரி முறையைக் கொண்டுவர பாபாசாப் பட்ட பாடுகள் அதிகம்.

இது சம்பந்தமாக அவர் நடத்திய போராட் டங்கள், அரசாங்கத்தை கலங்கடித்த பின்னரே ஒரு சட்டத்தின்மூலம் இதற்கு ஒரு தீர்வு பெறப் பட்டது.

ஆக.... நிலச் சீர்திருத்தம், விவசாயிகள் நலன், நிலவுடைமை ஒழிப்பு, நிலவரி வசூல் போன்ற பொருளாதாரத் திட்டங்களில் பெரும் புரட்சி செய்த பாபாசாப் அம்பேட்கரை, இந்தப் பொதுவுடைமை வாதிகள் ஏன் போற்றுவ தில்லை....?

இது மட்டுமல்ல.... இந்திய நாட்டை அடிமை படுத்தியிருந்த ஆங்கிலேயன் ஆட்சியில் தொழி லாள வர்க்கத்தின் துயர் துடைக்க எத்தனித்த போது அதைச் செப்பனிட்டுக் கொடுத்த செம்மல்தான் பாபாசாப் அம்பேட்கர்.

ஆம், பம்பாய் மாகாண கவர்னர் ஈ. லூம்லின் முன்மொழிய, இந்திய அரசுச் செயலாளர் எஸ். எஸ். அமரி வழிமொழிய, லின்லித்கோ வைஸ்ரா யின் ஆட்சி மன்றக் குழுவில் 20-7-42 அன்று தொழிலாளர் நல அமைச்சராக அந்த ஊமை களின் தலைவன் பொறுப்பேற்ற பின்னர்தான் இந்திய உழைக்கும் வர்க்கமே உரிமைகளைப் பெற்றது.

அவர் தொழில் அமைச்சராக இருந்து தீட்டிய திட்டங்கள்தான், தொழிலாளர் நலனுக் கான சட்டங்களாகி இன்றுவரை பாட்டாளி வர்க்கம் பயன்பட்டு வருகிறது.

ஒரு நீண்ட கட்டுரைத் தொடருக்கான இக் கருத்தை தற்போது ஒரு சில வரிகளில் உற்று நோக்குவோம்.

முதலாளியிடம், போய் பேசிவிட்டு வருவதையே ஒரு சாதனையாகச் சித்தரித்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்கள் மத்தியில், 'தொழிலாளி முதலாளி' இருவரும் நேருக்கு நேர் சந்தித்து தத் தம் கருத்துக்களை ஒருவருக்கொருவர் எடுத்து வைத்து உடன்பாடு ஆவதற்கான முயற்சியாக, ஒரு மாநாட்டையே 7-8-42ல் தலைமையேற்று நடத்தியவர் பாபாசாப் அம்பேட்கர்.

இதன்மூலம்.... 'பேச்சு வார்த்தைக்கு' ஒரு வடிவம் கொடுத்தார், இதனால் தீர்ந்த தொழிலாளர் பிரச்சனைகள் ஏராளம்.

இதே போன்று.... தொழிலாளி— முதலாளி இவர்களுடன் அரசு பிரதிநிதிகளும் பங்கேற்று தொழிலாளர் நலத்தை ஆய்வு செய்யும் 'முத்தரப்பு' மாநாடு ஒன்றையும் 7-9-1943ல் தலைமையேற்று நடத்தி வழி காட்டியவர் அம்பேட்கர்.

இந்த நடைமுறைதான் பெரும் 'ஆலைத் தொழிலாளர் முதல் ஆட்டோ டிரைவர்கள்' வரை இன்றைக்குக் கடைபிடிக்கப் பட்டு வருகிறது.

அவர் நடத்திய தொழிலாளர் நல கூட்டங்களும் அவராற்றிய சொற்பொழிவுகளும், அதனால் விளைந்த நன்மைகளும் ஏராளம், ஏராளம்.

பாராளுமன்றத்தில் அவர் தாக்கல் செய்த பல மசோதாக்கலால் தான் பாட்டாளி வர்க்கம் படிப்படியாக பலன்களைப் பெற்று வருகிறது.

தொழிலாளர் நலன்களை உற்பத்தி செய்யவே அவரால் தொழிலாளர் நலக் கமிஷன் அலுவலகம் முதன் முதலாக 9-4-45ல் ஏற்படுத்தப் பட்டது.

இந்தியாவில் வேலை வாய்ப்பு அலுவலகம் திறப்பதற்கும் அவரே மூலகாரணம்.

தொழிலாளர்களின் ஊதிய நிர்ணயம்—கூடுதல் நேரப்பணிக்கு அதிகச் சம்பளம்—சம்பளத்துடன் கூடிய விடுமுறை— விடுமுறை நாட்களை கட்டாயமாக்கியது— தொழிலுக்கேற்றபடி சம்பளம் வகுத்தது— விலைவாசிக்கேற்றபடி பஞ்சப் படி தரும் திட்டம்— செய்யும் தொழிலுக்கேற்ற சலுகைகள்— வசதிகள்— தொழிலாளர் நலனுக்கான விதிமுறைகள் போன்ற அனைத்தையும் ஒவ்வொரு சட்டத்தின்மூலம் பெற்றுத் தந்தவரே பாபாசாப் அம்பேட்கர் அவர்கள்தான்.

இது மட்டுமல்ல— உழைக்கும் தொழிலாளர் ஓய்வு பெறும்போது, வெறுங்கையை வீசியபடி வெளியேறக் கூடாது என்பதற்காக 'சேமநல நிதி த் திட்டங்கள்— உழைக்கும்போது பாதிக்கப் படும் பாட்டாளியை பாதுகாக்க வகைசெய்யும் நஷ்டஈடுச் சட்டங்கள்— இன்ஸ்யூரன்ஸ் திட்டங்கள் போன்ற எண்ணற்ற உரிமைகளை ஏற்படுத்தி தந்தவர்தான் பாபாசாப் அம்பேட்கர்.

இவைகளை எல்லாம் விரிவாகவும், தெளிவாகவும், தேதி வாரியாகவும, அரசு ஆணை எண் குறிப்பிட்டும் நம்மால் எழுத முடியும் என்றாலும.... அந்த விபரக் குறிப்புகளை வடிவமைப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல என்பதனால் ஒரு சில தலைப்புகளை மட்டுமே பார்வைக்கு வைக்கிறோம்.

ஆனால் இவைகளெல்லாம் பாபாசாப் அம்பேட்கரால் நிறைவேற்றப் பட்ட பின்பும்.... இந்தியத் தொழிலாளர்களின் தோன்றாத் துணைவராக அவர் திகழ்ந்த பின்பும், அவரது பணியையும், புகழையும் இருட்டடிப்பு செய்வதில் இந்திய மார்க்ஸிய வாதிகள் முன்னணியில் நிற்கிறார்களே அது ஏன்....?

மே, மாதம் முதல் தேதி.... வந்துவிட்டால் போதும் தொழிலாளர் தினமென்று கோஷமிட்டு, மத்தியான வெயிலில் மேதின ஊர்வலம் நடத்தி எட்டுமணி நேர வேலையை பெற்றுத் தந்த 'சிக்காக்கோ' என்று நீட்டி முழங்கி நிறையப் பேருக்கு வீர வணக்கம் செய்யும் இந்தியக் கம்யூனிஸ்ட்கள்....

இங்கு இந்தியாவில் எட்டுமணி நேரப் பணியை பாட்டாளி வர்க்கத்திற்கு 4-4-44 அன்று சட்டமாக்கித் தந்தாரே.... அந்தத் தலைவர் பாபாசாப் அம்பேட்கரின் பெயரை உச்சரிக்கக்கூட மனமில்லாமல் ஒதுங்கிக் கொள்கிறார்களே....

இவர்களென்ன பொதுவுடைமை வாதிகளா....? அல்லது பொய்மை வாதிகளா....?

**முதல் வேலைநிறுத்தம் :**

'தொழிலாளர்கள் உரிமைகளை' முடக்கி வைக்க அரசு தீர்மானித்தபோது, அதைச் சட்ட மன்றத்திலேயே எதிர்த்துபேசி, அதையும் மீறி அவை சட்டமாகியபோது, இந்தியாவிலேயே முதன்முறையாக 'தொழிலாளர்களின் ஒருநாள் வேலைநிறுத்த நிகழ்ச்சி'யை பம்பாயில் நடத்துவதில் முன்னணித் தலைவராக நின்றாரே பாபாசாப் அம்பேட்கர்.......

அது இந்தத் தொழிற்சங்க கம்யூனிஸ்டுகளுக்கு நினைவில்லையா?

அந்த வேலைநிறுத்த விளக்கக் கூட்டம் 7-11-1938ல் பம்பாயில் நடைபெற்றபோது அம்பேட்கருடன் கம்யூனிஸ்ட் தலைவர்கள் எஸ். ஏ டாங்கே, ரணதிவே போன்றோரும் பங்கேற்றார்களே அந்தப் பழைய சம்பவம் இந்தியப் பொதுவுடைமைவாதிகளுக்கு மறந்துபோய்விட்டதா ?

''அனைத்துத் துறைகளிலும் சமத்துவத்தைச் செயல்படுத்துவதற்கு அதிகாரம்பெற்ற அரசு வேண்டும்—என்பதே எனது நோக்கம். இதற்கு முன்னோடியாக நிலம் தொழில் ஆகியவற்றை தேசவுடைமையாக்க வேண்டும். சோஷலிஸக் கொள்கைகளை செயல் படுத்தாமல் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பேச எந்த அரசுக்கும் அருகதையில்லை. இதுதான் எதிர்காலத்தில் வரும் எந்த அரசுக்கும் நான் சொல்ல விழைவது....!''

— பாபாசாப் அம்பேட்கர்.

[நூல்: அண்ணல் அம்பேத்கரின் அரும்பணி ஒரு ஆய்வு....பக்கம் 101.]

—என்று பொதுவுடைமைத் தத்துவத்தின் சாராம்சத்தையே 13-12-1946ல் பாராளுமன்றத்தில் முழங்கினாரே....அது இந்திய மார்க்சியவாதிகளின் அறிவுக்கு எட்டவில்லையா?

ஆக.... பொதுவுடைமைச் சித்தாந்தத்திற்கு பக்கபலமாக, பாட்டாளிவர்க்கத்தின் நலனுக்காக இந்தளவிற்கு பாடுபட்டுள்ள பாபாசாப் அம்பேட்கர் பெயரை இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மறைக்கவேண்டிய அவசியமென்ன?

தமது இலட்சியத்திற்கு உறுதுணையாக இருக்கும் ஒருவரை — மிகப்பெரிய சமூகத்தின் ஒப்பற்ற தலைவரை—அந்தத் தலைவரின் தன்னிகரற்ற நற்செயலை ஏன் இவர்கள் முரண்பாடாக விமர்சிக்கிறார்கள்?—என்ற சிந்தனையில் மூழ்கும்போதுதான் 'இந்தியச் சமூக அமைப்பு' நமது பார்வைக்கு மீண்டும் வருகிறது.

தான் துவக்கிய அரசியல் இயக்கத்திற்கே தொழிலாளரை முதன்மைப்படுத்தி ''சுதந்திரத் தொழிலாளர் கட்சி'' என்று பெயரிட்ட தலைவரை—தமது கொள்கைக்குக் கூட்டாளியாக்கவேண்டிய ஒரு பாட்டாளித் தலைவரை தீட்டாளியாக்கி தள்ளிவைக்கவேண்டிய நிலைக்கு 'கம்யூனிஸ்ட் கட்சிகள்' சொல்லுகிறதென்றால் அதற்கு மூலகாரணம் தத்துவத்திலல்ல கட்சி தலைமையில்தான்!

ஏனெனில்....இந்திய சமூக அரசியலமைப்பை அகற்றுவதற்கான மாற்று சித்தாந்தமான மார்க்ஸியத்தை இங்கு கையிலெடுத்திருப்பவர்களே ... எதிரிகள் கூடாரத்தின் ஒற்றர்படைத் தளபதிகள் தான்!

அதனால்தான் இங்கு ''சிகப்பு சிந்தனை'' வர்ணச்சகதியில் மூழ்கிக்கிடக்கிறது.

''ஆசியாவின் சமூக வாழ்வில் ஓர் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனிதகுலம் தனது வாழ்க்கை லட்சியத்தை நிறைவேற்றமுடியுமா என்பதே இங்குள்ள கேள்வி....!''

— மார்க்ஸ்

[நூல்: மார்க்ஸ்—எங்கெல்ஸ் தேர்வு நூல்—3 பக்கம் 202.]

—என்று இந்தியாவைக் குறித்து மார்க்ஸ் எழுப்பியக் கேள்வியைப் போலவே ...இந்தியக் கம்யூனிஸ்ட்களிடம் நாமும் ஒரு கேள்வியை முன்வைக்கிறோம்.

இந்தியச் சமூக அமைப்பில் ஒரு மாபெரும் புரட்சியை முன்னெடுத்துச் சென்ற பாபாசாப் அம்பேட்கரை தொடாமல் இங்கு பொதுவுடைமைத் தத்துவம் வேரூன்றிவிடுமா?

இதை நாம் கேட்கும்போது அங்கிருந்தும் ஒரு எதிர்க்கேள்வி வருகிறது. அதுதான்....

''அம்பேட்கர் என்னதான் புரட்சி செய்தாலும், இறுதியாகப் பௌத்தத்தில் போய் இணைந்துவிட்டாரே....!''

இந்தக் கேள்வி ஒரு மார்க்சியவாதி எழுப்ப வேண்டிய கேள்விதானா? அதிலும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் இப்படிக் கேட்பது நாணயம் தானா?

இவைகளுக்கெல்லாம் பதில் கூறவேண்டுமானால் நாம் அம்பேட்கரையே அணுகவேண்டியதுள்ளது.

அவர் என்ன சொல்கிறாரென்றால்....?

(அடுத்த இதழில் இக்கட்டுரைத் தொடர் நிறைவடையும்)

# புதுக்கனல் பூத்தநாள்

பெ. தமிழினியன்



ஆண்டாண்டு காலமாக இந்தியாவில்
ஆட்சிக்கொடி ஏந்திநின்ற சாதியத்தை
பூண்டோடு ஒழிப்பதற்கு எழுந்துநின்ற
புதுக்கனல்தான் சட்டமேதை அம்பேத்கரே....!

கோணல்புத்தி நாணல்வாழ்க்கை கொண்டோரெல்லாம்
கோல்பிடித்து சாதியத்தை வளர்த்துவிட்டார்....!
குள்ளநரிக் கூட்டத்திலே உழைப்போரெல்லாம்
கொடுமைக்கு ஆளாகித் தனிமைப்பட்டார்....!

வால்பிடித்த கூட்டமதை மேலோரென்றும்
வளம்படைத்த ஆதியரை கீழோரென்றும்
குலம்பிரித்தான் சூழ்ச்சியாக பார்ப்பானன்று
துணிந்துநின்றார் ஆதியரும் பார்ப்போமென்று....!

தெருவில்நீ நடப்பதற்கும் உரிமையில்லை
தேநீர்டீ அருந்துதற்கும் தகுதியில்லை....!
கருவினுள்ள சிசுகூட மாடுமேய்க்க
கட்டாயம் வரவேண்டும் என்றுரைத்தான்....!

விழிக்காத மக்களெல்லாம் விடியல்பெற
விழித்திருந்து தொண்டுசெய்த நம்தலைவன்
அழிப்பதற்கு முடியாது என்றிருந்த
ஆரியத்தின் வேரறுக்க உறுதிபூண்டார்....!

ஆரியம்தான் அழிந்திடுமோ என்றுஅஞ்சி
அரிசனங்கள் என்றுநம்மை அழைத்தோரெல்லாம்
வீரியமே இழந்து அன்று வீழ்ந்துபோனார்
விவேகமிகு நம்தலைவன் பேச்சினாலே....!

வட்டமேஜை மாநாட்டுப் போர்க்களத்தில்
சுட்டெரிக்கும் சூரியனாய் கருத்தைசொல்லி
திட்டமிட்டுப் பெற்றுவிட்ட உரிமைதன்னை
கெட்டஎண்ண காந்திவந்து பறித்துவிட்டார்....!

போர்வாளாய் எம்கரங்கள் இனிமேல்மாறும்
பொழுதுஇனி புலர்வதற்குள் சேரிஒன்றாகும்.
யார்தடுத் தாலுமெல்லாம் பொதுவாய்ஆகும்!
'தீண்டாமை' என்றநிலை தீயில்வேகும்....!

(மலர் பயிலும்....தொடர்ச்சி)

● பெரியார் இயக்கக் கூட்டமைப்பின் இணைச் செயலாளர் கொள்கைப் பேரொளி கோவை கு. இராமகிருஷ்ணனின் எண்ணக் குவியல்.

● உலகப் பெண்கள் ஆண்டுக் கருத்தரங் கங்களில் தன்னை ஓர் அறிவுஜீவியாய் அடையா ளம் காட்டி எழுந்து நிற்கும் சகோ தரி வாசுகி பெரியார்தாசனின் சிந்தனைச் சாரல்.

● அகில இந்திய செட்யூல்டு இன விடுதலை இயக்கத் தலைவர் தளபதி மு சுந்தர ராசனின் வலதுகர விரல்களில் ஒன்றாக வளர்ந்து வரும் தமிழினியன் வடித்த கனல் கவிதை.

● நான் எதிர்பார்க்காத அளவிற்கு வாச கர்களால் பெரிதும் வரவேற்கப்படும 'போதி சத்வர் அம்பேட்கரும் பொதுவுடைமைத் தத்துவ மும்' என்ற எனது கட்டுரைத் தொடரின் 13வது பகுதி.

● மற்றும் பேச்சிமுத்துபேரன் தொகுத் தளித்த பாபாசாகேப்பின் நாட்குறிப்பு—வரலாற் றுச் சுருக்கம்—சாதனைப் பட்டியல்—புகழ்மொழி கள்.

ஆகிய கருவூலங்களோடு இம்மலரை உங்க ளின் சிந்தனைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

இச்சிறப்பு மலரை அலங்கரிக்கும் சிந்தனை கள் பலருக்குச் சொந்தமென்றாலும்....இதை வெளிக்கொணர்வதற்கு 'அறிவு வழி' ஆசிரியர் செஞ்சட்டை கே. பஞ்சாட்சரம் அவர்களின் சலியாத உழைப்புத்தான முழுமுதற் காரணம் என்பதை நினைவுபடுத்துவதில் மிகவும் மகிழ் கிறோம்.

அதோடு மிக முக்கியமாக.... 'நான்குமாத அறிவு வழி இதழ்களின்' மொத்த வெளியீட்டு செலவையும்.... இச்சிறப்பு மலர் ஏற்படுத்திவிட் டது என்பதையும் உங்கள் பார்வைக்கு வைக்கின் றோம்.

ஆனாலும் இச்சிறப்பு மலரை தனி விலை யாக்க நாங்கள் விரும்பவில்லை. காரணம்.... நாம் எழுத்து வியாபாரிகளல்ல! இலட்சியவாதி கள்.

எனவே... இதழ் பயினும் இதயங்களே....!
உங்கள் நற்கருத்தைக் கூறுங்கள்!
இயன்ற நன்கொடையைத் தாருங்கள்!
நன்றி! வணக்கம்.

மு. பா. எழிலரசு
துணை ஆசிரியர்—'அறிவு வழி'


## ஆயுள் இன்சூரன்ஸ்

### செய்யவேண்டுமா?

கார், ஸ்கூட்டர், இன்சூரன்ஸ் செய்ய வேண்டுமா? அஞ்சல் துறை தேசிய சேமிப்பு பத்திரங்கள் வாங்க வேண்டுமா? கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தோழர் எஸ். லெனின்
(மே. பா.) நெ. து. சுந்தரவடிவேலு
எண். 32, கிழக்கு பூங்கா தெரு
செனாய் நகர், சென்னை-6000 030

தொலைபேசி எண் : 612526

### மணவாழ்க்கை
### குடும்ப கட்டுப்பாடு
### ஆலோசனைகள் தேவையா?

தம்பதிகளின் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு தக்க ஆலோசனைகள் இலவசமாகப் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

—டாக்டர் திருமதி கு. கு இரஷ்யா
எம். பி. பி. எஸ்., எம். எஸ். பி.எச்

**அலுவலகத்தில்:**
திங்கள், புதன், இரண்டு நாள் காலை 10-30 முதல் 11-30 வரை.

குடும்ப நல அலுவலகம்
418, பாந்தியன் சாலை
எழும்பூர், சென்னை-600008.

**இல்லத்தில் :**
சனிக்கிழமை ஒரு நாள், காலை 10 முதல் 12 மணி வரை.

—53, கிழக்கு முதல் பிரதான சாலை
செனாய்நகர், சென்னை-6000 030

## மணமக்கள் தேவை!

### சேலம் சா. ராசன்

அசோக் நகர்
திருமண அழைப்பு நிலையம்
44, ஏழாம் நிழற்சாலை
அசோக் நகர் : சென்னை-600083

LICENCED TO POST WITHOUT PREPAYMENT—REGD. NO. TN/MS(N)75 WPP-16.



## பாபாசாகேப் பற்றி பெரியார்

டாக்டர் அம்பேட்கர் அவர்கள் பற்றற்ற பகுத்தறிவாதி, சமூகக் குறைகளை நீக்கப் பாடுபட்டவர். செயற்கரிய செய்த மனித நலத்தைத் திருத்திய சிலர்களில் ஒருவர். ஷெட்யூல்டு மக்களின் இரட்சகர். உலகினரின் பொதுச் சொத்தானவர். வகுப்புரிமையை வாங்கித் தந்தவர். இவருக்கு முன்னும் பின்னும் இவரைப் போன்று தொண்டு செய்ய எவரும் முன்வரவில்லை.

—பெரியார் ஈ. வெ. ரா.

14-4-1966 விடுதலை

## பெரியாரைப் பற்றி பாபாசாகேப்

பார்ப்பனல்லாதாருக்கு நான் சொல்லுவது என்னவென்றால் தலைவர், ஒற்றுமை, தலைவரிடம் மரியாதை ஆகியவைகளில் மற்ற கட்சிகளைப் பார்த்து படித்துக் கொள்ளுங்கள். காலங்கடவா முன்னர் கற்றுக்கொள்ளுங்கள்.

ஆதலால் உங்கள் தலைவர் பெரியாரைக் குறை கூறுவது புத்திசாலித்தனமான காரியம் ஆகாது. எனவே தலைவர் பெரியாரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து, மதித்து நடந்து கொள்ளுங்கள்.

—பாபாசாகேப் அம்பேட்கர்

30-9-1944 குடியரசு

தமிழ்நாடு பகுத்தறிவு சமதர்ம இயக்கத்திற்காக இயக்கத்தின் செயலாளர் தோழர் கே. பஞ்சாட்சரம் அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு, குத்தூசி குருசாமி இல்லம், 500, பெரியார் ஈ. வெ. ரா. நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை-600 016 என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது.

அச்சிட்டவர்: ஏன். எம். பாண்டுரங்கன், பாமா பிரசுரம், சென்னை-600 002.